தயரதன் புதல்வனைக் குறித்து மேலும் துயருற்றுப் புலம்புகின்றான். அவனுக்கு ஆறுதல் கூறுகிறாள் கோசலை. அப்போது தசரதன் தான் முன்பு அறியாமல் செய்த ஒரு தவற்றினால் முனிவரால் சபிக்கப் பட்டதை அவளிடம் கூறி, தான் மகனைப் பிரிந்தால் இறப்பேன் என்கிறான். அவ்வாறே இராமன் கானகம் சென்றதை அறிந்தவுடன் தசரதன் உயிர் பிரிகிறது. கோசலையின் எல்லையற்ற துயரை எழுதவும் இயலுமோ? கோசலை நாட்டுக்குத் திரும்பிய பரதன், அங்கு நடந்துவிட்ட அக்கிரமச் செயல்களை அறிந்து கொதிக்கிறான். பின்னர் குலம் , பொறாமை , கற்பு இவை சுமந்த கோசலையின் கால்களில் வீழ்ந்து அழுது அரற்றுகிறான். பரதனின் பண்புள்ளம் கண்டு, இராமனே கானகத்தினின்று திரும்பி வரக் கண்டவள் போல் மகிழ்ந்து அவனை வாழ்த்துகிறாள். கோசலை,

"முன்னை நும் குல முதலுளோர்கள் தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்.
உன்ன உன்ன நைந்து உருகி விம்முவாள்"

பின்னர், பரதன் இராமனைக் காணக் கானகம் செல்லும் வழியில் நாவாய் ஓட்டும் நட்பிற்சிறந்த குகனிடம் தம் தாயரை அறிமுகம் செய்கிறான் கோசலையை கோக்கள் வைகும் முற்றத்தான் (தசரதன்) முதல் தேவி, மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றவள்.. என்று அழகாக அறிமுகம் செய்கிறான். அவ்வாசகம் கேட்ட குகன் கோசலையின் அடிகளில் வீழ்ந்து அழுகிறான். அவன் யாரெனக் கோசலை வினாவுகிறாள். அவன் இராமனால்

தம்பியாக ஏற்றுக்கொள்ளப் பெற்றவன் எனப் பரதன் சொல்கிறான். உடன் கோசலை, "அழவேண்டாம் மைந்தர்களே இராமன் காடு சென்றதும் நல்லதாயிற்று நீங்கள் குகனொடும் சேர்ந்து ஐவரும் ஒருவராக இந்நாட்டை நெடுங்காலம் ஆளுங்கள்" என்று வாழ்த்துகிறாள்.

"நைவீர் அலீர் மைந்தீர் இனித்
துயரால் நாடு இறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று
ஆம் என்றே விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறனைய கானைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவிரும் ஒரு வீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்தீர்"

முன்பின் தெரியாத ஒருவனை அவன் வேடனாயினும் வேறுபாடு கருதாது தன் மகனாக ஏற்றுக்கொள்ளும் பேரன்பு படைத்தவள் கோசலை கோசலையின் இந்தப் பரந்த உள்ளமே இராமனிடத்தும் படிந்திருந்தது.

இராமன் குறிப்பிட்ட நேரத்தில் வரவில்லை என்று வருந்திய பரதன் தீப்பாய முற்படுகிறான். யார் தடுத்தும் கேளாத அவனைக் கோசலை பிடித்து நிறுத்தி, "மகனே நீ இறந்தால் உலகம் அழியும். எல்லாம் விதி என்று உணர் தருமம் காக்கும் உன் பெருமை ஊழி மாறினும் மாறாது. எண்ணில் கோடி இராமரும் உன் அருளுக்கு அருகில் நிற்கமுடியாது" என்று மனந்திறந்து பாராட்டுகிறாள்.

பாராட்டுக்குரியவன் பரதன் மட்டுமல்ல, உலகம் போற்றும் உத்தம புருஷனான தன் மகன் இராமனை விட பல கோடி மடங்கு உயர்ந்தவன் பரதன் எனப் பாராட்டும் பரந்த உள்ளம் படைத்த கோசலையும் தான்

"தாயொக்கும் அன்பில்" என்று தசரதனைக் கம்பர் கணிப்பார். அந்த அன்புத் தாயின் முழு வடிவமே கோசலை. அனைவரையும் நேசித்து தம் மக்களாகக் கருதும் உயர்ந்த தாய்மை அன்பு படைத்தவள் என்பதால் கோசலையைக் கம்பர் மாசற்ற அன்புடைய கோசலை என்று பாராட்டுகிறார்.

புதுக்கோட்டைக் கம்பன் கழக நிர்வாகிகள்



27-7-2002

அமர்ந்திருப்பவர்கள் : செயலாளர் வீர.காசிவிசுவநாதன், தமிழருவி மணியன், மாண்புமிகு இராம. வீரப்பன், தலைவர் இரெ.இராமையா, துணைத் தலைவர்கள்ஜீ.வி. சுப்பிரமணியன், சி. ராமச்சந்திரன், பொருளாளர் பெ. ஆறுமுகம்,

நிற்பவர்கள் : இணைச் செயலாளர்கள் சி.கோவிந்தராசன், ரா.சம்பத்குமார்,

துணைச் செயலாளர் கறு.இராமசாமி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.ஜானகிராமன்,


27ஆம் ஆண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகள்



கம்பன் மாமணி விருதை இராமகதா ரத்தினம் V.தியாகராஜனுக்கு சென்னை கம்பன் கழகத் தலைவர் மாண்புமிகு. இராம.வீரப்பன் வழங்குகிறார் உடன் புதுகை கம்பன் கழக இணைச்செயலர் ரா.சம்பத்குமார், தலைவர் ரெ. இராமையா, தமிழருவி மணியன், துணைத்தலைவர் ஜி.வி.சுப்பிரமணியன், வயி.ச.வெங்கடாசலம், செயலாளர் வீர. காசி விசுவநாதன், இணைச்செயலர் சி.கோவிந்தராஜன் உள்ளனர்.



27ம் ஆண்டு கம்பன் விழா மலரை சென்ட்ரல் ரோட்டரி தலைவர் ஜி.அந்தோணி வெளியிட பி.சொக்கலிங்கம் பெற்றுக்கொள்கிறார். உடன் இணைச்செயலர் ரா.சம்பத்குமார், தலைவர் ரெ.இராமையா, மாண்புமிகு. இராம.வீரப்பன், வயி.ச.வெங்கடாசலம், செயலாளர் வீர.காசி விசுவநாதன், துணைச்செயலாளர் கறு.இராமசாமி இணைச்செயலர் சி.கோவிந்தராஜன், உள்ளனர்.



2ம் நாள் நிகழ்ச்சிமுறையீட்டு மன்றம்

நடுவர் : எம். இராமச்சந்திரன்,


முறையிடுவோர் : ரா. சம்பத்குமார், பாரதி நேசன், இரா.மாது, புனிதா ஏகாம்பரம்



3ம் நாள் மாலை பட்டி மண்டபம்

நடுவர் : நெல்லைக்கண்ணன்,

வாதிடுவோர் : இரா. சந்திரசேகரன், ராஜாராம், உமா மகேஸ்வரி



3ம் நாள் நிகழ்ச்சி கவியரங்கத்தில்
மாண்புமிகு. மீன்வளத்துறை அமைச்சர் எம். இராதா கிருஷ்ணன், உரையாற்றுகிறார்
உடன் மு.பா, தனிக்கொடி, கங்கை மணிமாறன், ம.ராஜேந்திரன்



பரிசளிப்பு
காவல் துணைகண்காணிப்பாளர் திருமதி. கயல்விழி பரிசு வழங்குகிறார்.
உடன் நகர்மன்றதலைவர் துரை.திவியநாதன், வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் தாளாளர் ஆர்.எம்.வி. கதிரேசன், தலைவர். ரெ.ராமையா, துணைத்தலைவர் ஜீ.வி.சுப்பிரமணியன், செயலாளர்.வீர.காசி விசுவநாதன், இணைச்செயலர் சி.கோவிந்தராஜன் உள்ளனர்.

சுமித்திரை

(முனைவர். பழ.முத்தப்பன் எம்.ஏ., பி.எச்.டி.,
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி)

கம்பன் காவியத்தில் காணப்பெறும் பாத்திரங்கள் வாழ்வியல் பாத்திரங்களாகும். இராமாயணம் புராணக் காப்பியமாக இருந்தாலும் அதில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் நம்மிடையே இன்றும் உலவி வரும் பாத்திரங்களாகும். அப்பாத்திரங்கள் ஒன்றுதான் சுமித்திரை. சுமித்திரை என்ற சொல்லிற்கு - 'சரிநிறை; சரியளவு, நிதானம்' என்ற பொர்ருள்களைக் கதிரைவேற்பிள்ளை தமிழ்மொழி அகராதி குறிப்பிடும். 'நிதானம்' - என்ற பொருள், இராமாயண சுமித்திரைக்கு உரியதாகவே அமைகிறது. உயிர்எலாம் உறைவதோர் உடம்பும் ஆகினான் என்ற பெருமைக்குரிய தயரதனின் பட்டத்தரசிகளில் ஒருவளாகிய சுமித்திரை மற்ற இரு தேவியரைவிட நிதானமிக்கவளாகவே விளங்குகிறாள். எனவே தான் பெற்ற பெயரின்-பொருளுக்கேற்ப விளங்கும் சுமத்திரையின் பாத்திரப் படைப்பைச் சிந்திப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுமித்திரை தயரதனின் தேவியாக இடம் பெற்றாலும், காப்பியத்தில் மிகக் குறைவான இடத்திலேயேதான் வந்து செல்கிறாள். இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால், குறிப்பிடத்தக்க மூன்று இடங்களிலேதான் அவளின் நிகழ்முறைகள் அமைகின்றன. சுமத்திரை தயரதனின் பட்டத்தரசியாகச் சிறப்பிக்கப் பெறுவதைவிட - இலக்குமணனின் தாய் என்ற முறையிலேதான் சிறப்பிக்கப் பெறுகிறாள். கோசலையும், கைகேயியும் கணவனாம் தயரதனோடு உரையாடி - விருப்பு, வெறுப்புகளைக் காட்டுகிறார்கள். ஆனால் சுமித்திரையோ எந்த இடத்திலும் தயரதனோடு உரையாடியதாகவோ - வாழ்வியல் நிகழ்ச்சிகளைப் பெற்றதாகவோ காட்டப் பெறவில்லை. மேலும் காப்பியத் தலைவனாம் இராமனோடும் மற்ற இருவருக்கும் இருந்த பேச்சு வார்த்தை சுமித்திரைக்கு இல்லை. ஆம். சுமித்திரை காப்பியப் பிறபாத்திரங்களோடு பேசியதாகக் காட்டப் பெறாது - தன் மக்களில் ஒருவனாகிய இலக்குவனோடு மட்டுமே சந்திப்பதாகவும் - உரையாடுவதாகவும் காட்டப் பெற்றிருக்கிறாள். அத்தகைய சந்திப்பும் கூட கானேகும் காட்சியான - நகர் நீங்கும் படலத்தில் மட்டுமே நிகழ்கிறது. இவ்வாறு குறிப்பிடத்தக்க ஒர காட்சியில் மட்டும் இடம் பெற்ற சுமித்திரை - காப்பியம்

முழுமைக்கும் காரணமாகிய கைகேயி பாத்திரத்தை விடப் படிப்போரின் உள்ளத்தில் நீங்காத பாத்திரமாக அமைந்துள்ளாள் என்பதை மறுக்க இயலாது.

பெண் பாத்திரங்களில் மிகக் குறைந்த இடத்தில் இடம் பெறுகிற சுமித்திரை பெருமைக்குரியவளாகவே காட்டப் பெறுகிறாள். சுமித்திரை முதல் முதலாக அறிமுகமாகும் இடம்- கலைக்கோட்டு முனிவன் செய்த யாகத்தின் பயனாய்க் கிடைத்த அமிர்தத்தைத் தயரதன் தேவியர்க்குப் பங்கிடும் இடமாகும். தன் மூன்று தேவியர்க்கும் பங்கீடு செய்யும் பொழுது மறுபாதியில் பாதியைச் சுமித்திரைக்குக் கொடுத்தான் என்றும், அமிர்தத்தில் பிதிர்ந்து வீழ்ந்ததையும் சுமித்திரைக்குக் கொடுத்தான் என்றும் காப்பியம் கூறுகிறது. இந்த இடத்தில்தான் சுமித்திரை என்ற பெயர் காப்பியத்தில் காட்டப் பெறுகிறது. அவ்வாறு காட்டப் பெறும்பொழுது எவ்வித அடைமொழியும் இல்லாமல் "சுமத்திரைக்கு அளித்தனன் என்றும், சுமித்திரை தனக்கு நல்கினான்" என்றும் கம்பன் குறிப்பிடுகிறான். மற்ற தேவியர் இருவர்க்கும் முறைமையில் ஒருமுறை மட்டும் கொடுத்த தயரதன் சுமித்திரைக்கு மட்டும் இருமுறையாக அமிர்தத்தைக் கொடுக்கிறான் என்ற சிறப்பு மட்டும் அக்காட்சியில் இடம் பெறுகிறது. எனவே அறிமுக நிலையில் சுமித்திரைப் பாத்திரத்தின் சிறப்புகள் எதனையும் காப்பிய ஆசிரியர் குறிப்பிடாமல் வெறும் பெயரை மட்டும் குறிப்பிட்டுக் காட்டிருப்பது நினைவிற்குரியதாகும். மற்ற இருவருக்கும் 'காமருகோசலை', 'கைகயன் தனையை' என்று அடைமொழி கொடுத்துக் கூறியிருப்பதும் நினைவுகூறத் தக்கதாகும். எனவே தொடக்கத்தில் எவ்விதச் சிறப்புமில்லாமல் காட்டப்பெறும் சுமித்திரைப் - பாத்திரம் காப்பிய வளர்ச்சியில் சிறிது சிறிதாக உயர்த்திக் காட்டப்பெற்று - இறுதியில் நிலைத்த புகழைப் படிப்போரின் மனதில் பெறும் அளவிற்குப் பரிணாம வளர்ச்சியைப் பெறுகிறது.

ஆனால் அதே நேரத்தில் அடைமொழியால் அறிமுக நிலையில் சுமித்திரை சிறப்பிக்கப் படவில்லை என்றாலும், அமிர்தம் கொடுக்கப் பெற்ற பகுப்பு நிலையில் பெருமைக்குரியவளாகக் காட்டப் பெறுகிறாள் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். ஆம், அமிர்தத்தில் பிதிர்ந்தது சுமித்திரைக்குக் கொடுக்கப் பெற்றதே தவிரப் பிற தேவியர்க்குக் கொடுக்கப்படவில்லை. இன்னும் சில உரையாசிரியர்கள் முதலில் சரிபாதி கோசலைக்குக் கொடுக்கப் பெற்று -பின் சரிபாதியில் ஒருபாதி கைகேயிக்குக் கொடுக்கப் பெற்று, இரண்டாம் முறையாக பிதிர்ந்ததைச் சுமித்திரைக்குக் கொடுத்தார்கள் என்று

எழுதியுள்ளனர். தயரதன் ஒருமுறைக்கு இருமுறை அமிர்தத்தைச் சுமித்திரைக்குக் கொடுத்தான் என்பது உண்மைநிலை. ஏன் இவ்வாறு இருமுறை சுமித்திரைக்குக் கொடுக்கவேண்டும்?

திருமால் தயரதனுக்கு மகனாக அவதாரம் செய்யப் போவதாக அறிவிக்கும் பொழுது தன் சங்கு சக்கரங்கள், ஆதிசேடனாகிய அனந்தாழ்வான் தம்பியராக அவதாரம் செய்ய, தான் இராமனாக அவதாரம் செய்யப் போவதாக அறிவிக்கிறார்.

"வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கருவுடை விரிகொள் பாயலும்
இணையர்கள் என அடிபரவ ஏகி, நாம்
வளைமதில் அயோத்தியில் வருதும் என்றனன்" (திருஅவ.22)

என்பது பாடல். இதன்படி நால்வர் அவதாரம் செய்யுவேண்டும். கோசலையிடம் திருமாலும், கைகேயியிடம் சக்கரமும், அவதரிக்க எஞ்சிய சங்கும், ஆதிசேடனும் சுமித்திரையிடம் சத்துருக்கன், இலக்குவனாக அவதாரம் செய்கின்றனர். எனவே நிதானக் குணமுடையவளாகிய சுமித்திரைதான் இருமக்களைப் பெறும் தகுதி வாய்ந்தவள், அதிலும் காலம் கடந்த குழந்தைப்பேறு என்பதால், முதல் இருதேவியரை விட சுமித்திரைதான் இளையவள், எனவே இருமகவைப் பெற ஏற்றவள் என்பதாலும் இருமுறை அவளுக்கு அமிர்தம் கொடுக்கப் பெற்றது போலும், எனவே மகவைப் பெற்ற சுமித்திரையைக் குறிப்பிடும் போது கம்பர்,

"இளையவற் பயந்தனன் இளைய மென்கொடி" (பாடல்.105)
"விடம்கிளர் விழியினாள் மீட்டும் என்றனள்" (பாடல். 106)

என்று இளமைப் பருவத்தவளாக - எழில் நலம் கொண்டவளாகக் குறிப்பிடுகிறார். எனவே திருவவதாரப் படலத்தில் அமிர்தம் பங்கிட்டளிக்கும் பொழுதும், மகப்பேறு பெற்ற பொழுதும் இடம் பெறுகின்ற சுமித்திரைப் பாத்திரம் - முதலில் பெயரளவில் அறிமுகமாகி, பின் இளயைநங்கை, இருமகவு பெறும் அளவிற்கு எழில் நலம் சான்றவள் என்று உயர்த்திக் காட்டப் பெறுகிறது. அதாவது நான்கு வடிவில் அதிகரிக்கும் திருமாலின் பெருமையில் இருவடிவைக் கருவில் தாங்கும் பேறு பெற்றவளாக, முதல் பரிணாம வளர்ச்சியில் சுமித்திரை காட்டப் பெறுகிறாள் எனலாம். எனவேதான் வை.மு.கோ.அவர்கள்,

"நாலு வடிவுடன் அவதரிக்கத் திருமால் சங்கற்பித்துள்ளதனால் இரண்டாம் முறை சுமித்திரைக்குச் சுதையை அளிக்குமாறு மன்னனுக்கு எண்ணம் உண்டாயிற்று" என எழுதுவார்.

சுமித்திரை இடம்பெறும் இரண்டாவது நிலை அயோத்தியா காண்டத்தில் நகர்நீங்கு படலத்திலாகும். கைகேயி வரத்தால் இராமன் காடேகும் காட்சி. தயரதன் - கைகேயி உரையாடல் பல பாடலகள். ஆயின் சுமித்திரை - தயரதனைக் காண்பதாகவோ, உரையாடுவதாவோ காட்டப் பெறவில்லை. மேலும் இராமனுடன் மற்ற இரு தேவியரும் உரையாடியதாகக் காட்டப் பெற்றிருக்கச் சுமித்திரை பேசியதாகவே காட்டப் பெறவில்லை. இவ்விரண்டு நிலையில் இருதேவியர்க்கு இடம் கிடைத்த அளவிற்குச் சுமத்திரைக்கு இடம் கிடைக்கவில்லை. உண்மைதான். ஆனால் ஒரு சிறப்பான இடத்தைச் சுமித்திரைக்கு அப்படலத்தில் கம்பன் கொடுத்து விடுகிறான். அதாவது கோசலை பால் இராமன் தான் காடேவது பற்றிக் கூறிட, அவள் ஆறாத்துயர் கொண்டு இறுதியில் தயரதனை நேரில் சந்தித்து இராமனைத் தடுக்கலாம் எனக் கைகேகியின் அரண்மனை செல்கிறாள். அவ்வாறு துயருற்றுச் செல்வாளைக் கண்ட இராமன் அவளை எவ்வாறு ஆற்றுப் படுத்துவது என எண்ணியபோது பிறருக்கு ஏற்படும் தன் பிரிவுத்துயரை ஆற்றுப்படுத்தும் வல்லமை பெற்ற ஒரே ஆள் சுமித்திரைதான் என்பதை உய்த்துணர்ந்து சுமித்திரையைக் காணச் செல்கிறான். இதனைக் கம்பர் குறிப்பிடும்பொழுது,

"போகின்றாளைத் தொழுது புரவலன்
ஆகம் மற்று அவள் தன்னையும் ஆற்றி இச்
சோகம் தீர்ப்பவள் என்று சுமித்திரை
மேகம் தோய தனிக்கோயிலை மேயினான்" (பாடல்.28)

எனக் குறிப்பிடுவார். தயரதனையும் கோசலையையும் ஆற்றுப் படுத்துவாள் - பிரிவுத்துயரைத் தீப்பவள் சுமித்திரை என்று குறிப்பிடுவதிலிருந்து - பாலகாண்டத்தில் இளையமென்கொடியாகக் காட்டப்பெற்ற சுமித்திரை- அயாத்தியா காண்டத்தின் முற்பகுதியில் தன் துயரைப் பொறுத்து - பிறர்துயரை ஆற்றுப்படுத்தும் பெருமை மிக்கவளாக - பொறுமைக் குணம் கொண்டவாளக் காட்டப் பெறுகிறாள். தயரதனுக்குக் கோசலையும், கைகேயியும் இராமன் பிரிவுத் துயரைப் போக்கக் கூடிய

அளவிற்கு உரிய தேவியர் அல்லர். சுமித்திரைதான் தயரதனது துயரத்தை மாற்றக் கூடியவள் என்ற அளவிற்கு இராமனால் உணரப் பெற்றவள் என்று சுமித்திரையைக் கம்பன் உயர்த்திக் காட்டும் இந்த இடம் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

அதே நேரத்தில் இராமன் பிரிவை அவள் சாதாரணமாகவும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவேதான்.

'வேற்றுக் கொடியாள் விளைவித்த வினைக்கு விம்மி
தேற்றத் தெளியாது அயர் சிற்றவை' (பாடல்.120)

எனச் சுமித்திரை குறிக்கப்படுகிறாள். எனவே இராமனின் பிரிவுத் துயரைத் தாங்க இயலாதவளாக இருந்தாலும், தன் குலத்தின் பெருமையைக் காத்திட தன் நிதானக் குணத்தைக் கைவிடாதவளாகவும் விளங்குகிறாள். எனவே மரவுரி தரித்து வந்த தன் குமாரர்களை நல்வழிப்படுத்தினாள்.

சுமித்திரையின் பாத்திரப் பண்பை உயர்நிலையில் வைத்திடும் காட்சி அவள் இலக்குவனுக்குப் பகர்ந்திடும் அறிவுரையே. கம்பன் மேடைகள் தோறும் முழக்கமிடுகிற - பலப்பல நயவுரைகட்கு இலக்காகிற பாடல். அப்பாடலுக்குரிய சூழலைக் கம்பன் படைத்திட்ட பாங்கு என்றும் எண்ணி எண்ணித் துய்க்கக்கூடிய பகுதியாகும். இலக்குவனைச் சமாதானப்படுத்தி -சுமித்திரையின் அரண்மனைக்கு அவனோடு இராமன் வருகிறான். அவர்களைச் சுமித்திரை காணுகிறாள். அதனைக் கம்பநாடன்,

"கண்டாள் மகனும் மகனும் தன்கண்கள் போல்வார்
புண்தாங்கு நெஞ்சத்தனளாய்ப் படிமேல் புரண்டாள்" (பாடல். 134)

என்று குறிப்பிடுகிறார். முதல்வரியில் மகனும், மகனும் என்ற சொற்கள் இராம, இலக்குவரை வேறுபாடு காணாது ஒன்றாகக் கண்டு உவந்தவள் என்பதைக் காட்டுகின்றன. இருவரையும் கண்டவள் நெஞ்சம் புண்ணாகிக் கிடந்தது என்பதையும் அவை காட்டுகின்றன. அதன்பிறகு இராமன் தான் அவளிடம் பேசுகிறான். அதிலும் தான் தந்தையின் வாய்மையைக் காப்பதற்காக வனம் ஏகிறேன், வருந்தற்க என ஆற்றுப்படுத்துவதாகக் கம்பன் காட்டுகிறான். அவனுடைய அக்காரண உரைக்குச் சுமித்திரை எவ்விதப் பதிலும் கூறாமல். அவன் கூறும் நியாயத்தை ஏற்றுக் கொண்டவர்வளாகக் காட்டப் பெறுகிறாள். பிறதேவியர் போல இராமன் காடேக ஏற்பட்ட சூழலை எவ்வித விமர்சனமும் செய்யாது - அமைதியே வடிவாகக் காட்சிதரும் அவளால்தான் இலக்குவனுக்கு

ஓர் உயர்ந்த அறவுரையைக் கூறமுடிகிறது. பிரிவுத் துயராம் உணர்ச்சிக்கு இடம் கொடுத்து விடாதவளால் தான் ஓர் உயர்ந்த உரையைப் பகரமுடியும் என்பதால்தான் கம்பர் இத்தகைய பின்னணியை அமைத்திருக்கிறார். இத்தகைய பின்னணி சுமித்திரையின் பாத்திரப் படைப்பின் நிதானத்தைக் காட்டுகிறது. இராமனுடைய பிரிவுக்குத் துயர் கொண்டு அலறிடாது - அமைதியாகத் துயரைத் தாங்கிக் கொண்டு- இலக்குவன் இராமனோடு காடேக அனுமதி வேண்டியபோது.

"ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் அயோத்தி
மாகாதல் இராமன் நம்மன்னவன் வையம் ஈந்தும்
போகா உயிர்த் தாயர் நம்பூங்குழல் சீதை என்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்.
பின்னும் பகர்வாள் மகனே! இவன்பின் செல் தம்பி
என்றும்படி அன்று; அடியாரினின் ஏவல் செய்தி.
மன்றும் நகர்க்கே இவன் வந்திடின்வா அது அன்றேல்
முன்னம் முடி என்றனள் வார் விழிசோர நின்றாள்" (பாடல்)

என்ற இருபாடல்களில் தன் அறிவுரையை வெளிப்படுத்துகிறாள். இராமன் இருக்கும் கானகம் அயோத்தியாகவும் - இராமன் இல்லா அயோத்தி கானகமாகவும் மாறப்போகிறது என்பதை முன்கூட்டியே கூறும் அறிவு நுட்பம் சுமித்திரைபால் காணப்பெறுகிறது. மேலும் மகன் மனைவியோடு செல்லாது - இராமன் சீதையைப் பெற்றோராக எண்ணிச் செல்லவேண்டும் என்ற உயரிய கருத்தையும் கூறுகிற பொழுது அவளுடைய சீதையையும் அனுபவ அறிவு வெளிப்படுகிறது. அதுமட்டுமல்லாது - முன்னம்முடி என்ற சொல் இறப்பு என்ற அவலச் சொல்லாக அமையாது - அதற்கு இணையான குறிப்புச் சொல்லாக அமைந்தமையும் அவளுடைய நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாகும்.

முற்பாடலில் இலக்குவன் இராம - சீதைக்கு மகனாக விளங்க வேண்டும் என்று கூறியவள், இரண்டாம் பாடலில் அடியாராகத் தொண்டாற்ற வேண்டும் என்று கூறி, இறுதியில் இராமனுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்யக்கூடத் தயாராக இருக்கவேண்டும் என்றும் கூறும் சுமித்திரையின் சொல்லாற்றல் அவளின் உயர்ந்த குணத்தைக் காட்டுவதாகும். இத்தகைய அறிவுரையை இலக்குவன் இறுதிவரை கடைப்பிடித்து நின்றமையைக் காப்பியப் போக்கில்

அறியமுடிகிறது. இத்தகைய குணத்தவளை - கம்பன் பெருமைப் படுத்தவேண்டும் என எண்ணி - அதனைப் பரதன் வாயிலாக நிறைவேற்றுகிறார்.

கங்கைகாண் படலத்தில் குகனிடம் தன் தாயரை அறிமுகப் படுத்தும்பொழுது பரதன்,

"நெறிதிறம் பாத் தன் மெய்யை நிற்பது ஆக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும் தொழுகுலம் ஆம் இராமன் பின்பு
பிறந்தாலும் உளன் எனப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள் என்றான்"

என்று பரதன் சுமித்திரையின் பெருமை பேசுகின்றான். தொடக்கத்தில் 'இளம் கொடியாள்' எனச் சுமித்திரையை அறிமுகப் படுத்திய கம்பர். பரிணாம வளர்ச்சியின் இறுதியில் 'பெரியாள்' என முடிக்கிறார். இதுதான் கம்ப சித்திரம். தயரதனை மணந்து இளங்கொடியாளாகத் திகழ்ந்த சுமித்திரை இலக்குவனைப் பயந்து வளர்த்து தன் அறிவுரைப்படி வாழப் பழக்கிய திறத்தால் 'பெரியாள்' எனப் பாராட்டப் பெறுகிறாள். இதுதானே பாத்திரப் பரிணாம வளர்ச்சி. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சுமித்திரை காப்பியத்தில் குறிப்பிடும் வகையில் இடம் பெறவில்லை. எனவே இராமகாதைப் பெண்பாத்திரங்களில் சுமித்திரை தனிஒரு நிலையில், தக்கதொரு பரிணாம வளர்ச்சியைப் பெற்றவளாகத் திகழ்ந்து, படிப்போர் உள்ளத்தில் நிலைத்து நிற்கிறாள் எனறாம்.



தெய்வக் கற்பினாள்

(டாக்டர். அ.அறிவொளி)

கைகேயியைச் சதிகாரி என்று நினைக்க வைப்பதற்காக *'மாகயத்தி'* என்று கம்பன் ஒரு கொடியபட்டத்தைக் கொடுத்தான்.

ஆனாலும் *'தெய்வக் கற்பினாள்'* என்று முன்பு அவனே அவளுக்குக் கொடுத்த பட்டத்தின் பெருமையில் பிறகு தரப்பட்ட *'மாகயத்தி'* பட்டம் எடுபடவில்லை.

அறிவு, நல்லொழுக்கம், ஆற்றல் யாவும் கொண்ட ஓர் அரச மாதா ஒரு கூனியாகிய வேலைக்காரிக்குத் தன் அறிவை இழந்து விடுவதாக அவளைக் காட்டுவது கம்பனுக்கே பிடிக்கவில்லை.

"அரக்கர்கள் செய்த பாவமும் அமரர்கள் செய்த தவமும் அவளைத் தீயவளாக மாறும்படித் தூரத்தின" என்று எழுதினான்.

இந்த இருவர் முயற்சியால் எந்த மனிதரும் மாறுவது எளிதே என்று கருதியதால் தான் அவளைத் தீயள் என்று கூறும் போது கூட *'தீயவையாவினும் சிறந்த தீயாள்'* என்றே பேசினான்.

இலியத் எனும் கிரேக்க மொழிக்காப்பியத்தில், ஹெலன் என்ற பெண் கணவனை விட்டு வேறு ஒருவனால் கடத்தப்பட்டும் அமைதியாய் போகிறாள்.

அதை அவளாக மேற்கொள்ளவில்லை தெய்வங்களே அவளை அப்படி மாற்றிவிட்டதாக ஆசிரியர் *"ஹோமர்"* எழுதினார்.

இதே மாதிரியே கம்பனும் எழுதியது வியக்க வைக்கிறது. இரண்டு வரம் கணவனிடம் தனக்கு ஏற்றபடி வாங்கும் வரை அவள் மனம் கல்லாகியே இருந்தது.

கணவன் மயக்கநிலை அடைந்த போது இதைப் பயன்படுத்தி இராமனைக் காட்டிற்கு வேகமாக அனுப்ப முயன்றாள்.

தந்தையை இராமன் பார்த்துவிட முடியாதபடி தடுத்தாள். வரம் வாங்கிய பிறகும் இராமனைக் காட்டிற்கு அனுப்பும் முயற்சியில் முழு வெற்றி கிடைக்குமா? என்று அவள் மனத்தளவில் பயந்தபடியே இருந்தாள் என்பது தெரிகிறது.

வசிட்டன், கோசலை, இலக்குவன், நகரமக்கள் ஆகியோர் ஒரு கூட்டணியாகி விட்டால் தன் வரம் பயன்தராது போகுமோ என்று கைகேயி தடுமாற்றத்துடன் தான் இருந்திருக்கிறாள்.

இராமன் இலக்குவனுடன் காடு போனதும் வசிட்டன் வெறும் வாயால் மட்டும் கிட்டியதும் தசரதன் இது காரணமாக இறந்ததும் மக்கள் இராமன் பின்னாலேயே போனதும், அவள் அச்சத்தை முழுவதுமாக நீக்கின.

தன் மகன் பரதன் தன் சதிக்கு இணங்கவில்லை தாய் என்றும் தன்னை மதிக்கவில்லை இராமனுக்காக மட்டுமே தாயைக் கொல்லாது விடுவதாக அவன் சொன்னான்.

இதனால் தான் வரம் வாங்கியதால் மகனையும் மாங்கல்யத்தையும் இழந்து விட்டோமேமென்று மெலிதாக அவள் எண்ணினாள்.

செய்த பாவங்களை மவுனமாக இருந்து பிறர் சொல்லும் இழிந்த பேச்சுகளைக் கேட்பது என்று முடிவு செய்து விட்டாள்.

இராமனை மட்டும் பார்த்துப் பேசும் துணிவு காட்டிற்குச் சென்ற பிறகு கைகேயிக்குக் கிடைக்காத ஒன்றாகவே ஆகிவிட்டது.

இராமனை அழைக்க பரதனும் பிற யாவரும் காட்டிற்குப் போகும் போது தானும் கூனியும் மட்டுமாக அயோத்தியில் இருக்கவோ தன் தந்தை நாடு போகவோ செய்யாத கைகேயி தன் தவறுக்குரிய தண்டனையைத் தாங்கிக் கொள்ளத் தயாராகி விட்டதையே காட்டுகிறது.

ஒரு ராணுவப்புரட்சி நடந்ததைப் போல கைகேயி இரவோடு இரவாக ஆட்சியை மாற்றி எதிர்ப்பவர் இல்லாமல் செய்தது ஒரு பெரிய சாதனையே ஆகும்.

சத்தியம் தவறாத மன்னன் இவள் மாளிகையிலேயே இருந்ததும் இவளுக்கு வரம் கொடுத்ததைத் தசரதன் ஒத்துக்கொண்டதும் அவளுக்கு இச்சாதனை செய்யத் துணை நின்றன.

தன்னையும் கூனியையும் தவிர யாவருமே தன் முடிவுக்கு எதிராக இருக்கும் ஓர் அரண்மனையில் தனித்து இருக்கும் கைகேயின் துணிவு பாராட்டுதற்குரியது.

நல்லவளாய் இருந்தவள் திரிந்த பாலானாள் ஆனால் பால் மீண்டும் திரிந்ததில் இருந்து மாறித் தூய்மை பெற முடியாது. கைகேயியோ தீயவளாய்த் திரிந்த பிறகும் முன்பு போல் அவள் நல்ல மனம் உடையவளாகி வருவதைக் குகன் அவளுக்கு வணக்கம் செலுத்தியதின் மூலம் அறிகிறோம்.

கைகேயி திரிந்தும் திரியாத பாலாகவே இருக்கிறாள்.

ஞானக் கூனி

(பேராசிரியர். ஜோன்ஸ், M.Com., M.Phil., திருச்சி)

ஒரு கதையிலோ, காவியத்திலோ அது சொல்ல வந்த செய்தியினைத் தெரிவிப்பதற்குத் தேவையான பாத்திரங்கள் அதில் இடம் பெறுவது இயல்பு. ஆயினும் அப்பாத்திரங்கள் எல்லாமே நேரிடையாகக் கதையின் கருவுக்கு தொடர்பு உள்ளவர்களாக இருக்கத் தேவையில்லை ஆயினும் கதைக் கருவுக்கு உருக்கொடுக்கும் பாத்திரங்கள் ! கதையில் தவிர்க்க முடியாதவர்கள். இராமன், சீதை இவர்கள் கதைதான் இராமாயணம் என்றாலும், இராவணன் இல்லையென்றால் அக்கதைக்கு கருவேயில்லை. இராவண வதம் தான் இராமாயணம். இக்காவியத்தின் கதாபாத்திரங்கள் அனைத்துக்கும் தெள்ளத் தெளிவாக பண்புநலன்கள் அல்லது குணக்குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறு அறுதியிட்டு இன்னதன்மையவள், இத்தகையவள் என்று கூறமுடியாத ஒரு பாத்திரம் கூனி என்றழைக்கப்படும் மந்தரையினுடையது.

கூனியை அறிமுகப்படுத்தும் போதே கம்பர் அவளைச் சீற்றத்தின் சின்னமாகக் காட்டுகிறார். அவள் நெஞ்சு பதைபதைக்கிறது. சினம் அடங்காமற் போகிறது. மனத்தில் அமைதியில்லை, கண்களில் கனல் பறக்கின்றது, சொற்கள் சூடாக வருகின்றன. மூவுலகுக்கும் ஊறுவிளைவிப்பாள் போல் தோன்றுகிறாள். அவள் அறிமுகப்படுத்தப்படும் நேரம் அயோத்தி நகரம் இருந்த நிலைக்கும், இவள் தோன்றும் தன்மைக்கும் நேர் எதிராக உள்ளது. இராமன் மகுடம் சூட்டப் பெறப் போகும் மகிழ்ச்சி பொங்கும் வேளை அது. அனைத்து உயர்களிலும் உவகை நிரம்பியிருந்த நேரம். ஆனால் கூனிமட்டும் மாறுபட்டுத் தோன்றிகிறாள்.

"தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்
கான்றுஎரி நயனத்தாள் கதிக்கும் சொல்லினாள்
மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்"

என்ற வரிகள் இதை நமக்கு உணர்த்துகின்றன. கைகேயியின் அரண்மனைக்குச் செல்லும் கூனி. உறங்கிக் கொண்டிருக்கும் கைகேயியைக் காலைத்தொட்டு எழுப்புகிறாள். பெருந்துன்பம் நெருங்கிக் கொண்டிருப்பதை உணராது உறங்குகின்றாள் கைகேயி என்று கூறி அதிர்ச்சி தருகிறாள். கைகேயியோ இராமனை "இராமனைப் பெற்ற எனக்கு என்ன குறை" என்று

கூறுகிறாள். கோசலை தன் அறிவினால் தன் வாழ்வை உயர்த்திக் கொண்டாள் என்று கூறுகிறாள். கூனி தன்னுடைய தலைவனும் மன்னர் மன்னனேயென்றும், தன் மகன் பரதனும் புகழுக்குரியவனே என்றும், அதனால் எப்படித் தான் தாழ்ச்சியுற முடியும் என்று பதில் உரைக்கின்றாள் கைகேயி. தாடகை என்னும் பெண்ணைக் கொன்றதனால், ஆணினத்திற்கே பழியும் ஆண்மைக்கே இழுக்கும் தேடிய இராமன், அடுத்த நாள் முடி சூடப் போவதாக கூனி கூறுகிறாள். ஆனால் கைகேயிக்கு இராமன் முடி சூடப் போகிறான் என்ற செய்தியை மட்டுமே உணர முடிகிறது. கூனி கூறிய பழிச் சொற்கள் கருத்தில் ஏறவில்லை. ஆகவே அந்த மகிழ்ச்சிகுரிய சேதி சொன்னதற்கு அரிய ஒரு பொன்மாலையை கூனிக்குப் பரிசாகக் கொடுக்கிறாள், அவ்வளவுதான் ! கூனி அதட்டுகிறாள், அரற்றுகிறாள், திட்டுகிறாள், தேம்புகிறாள், முறைக்கிறாள், அழுகிறாள். அம்மாலையைத் தரையில் எறிகிறாள். இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு, பேசத் தொடங்குகின்றாள். கைகேயியைப் புத்தியற்றவள் என்றும், பித்துப்பிடித்தவள் என்றும் ஏசுகிறாள். இராமனும், சீதையும் அரியணையில் வீற்றிருக்க, பரதன் தலைவணங்கித் தரையில் நிற்பதா என்றும், கோசலை தன் மகனின் சிறப்புக்கு வழி செய்தது போல் கைகேயி தன் மகனான பரதனின் சிறப்புக்கு முயற்சியேதும் செய்யவில்லை என்றும், நாடெல்லாம் இராமனின் ஆட்சிக்கு உட்படுவதென்றால் பரதன் காட்டிற்குச் சென்று தவம்புரிவதே மேல் என்றும், மன்னர்குடியில் பரதன் பிறக்கவில்லையோ என்றும் கூனி பலவாறு கூறுகிறாள். மேலும் தந்தையும், தாயுமே எதிரிகளானால் பரதன் பரிதாபத்திற்குரியனல்லவோ என்றும், அவனது கல்வியும், வீரமும், பிற நற்குணங்கள், சிறப்புக்கள் யாவும் வீணாவதோ என்றும், அரசன் மகளாய்ப் பிறந்து, வளர்ந்து, அரசன் மனைவியாக குடிபுகுந்து பேரரசியாக உள்ள கைகேயி இனி துயருறப் போவதை உணரவில்லையோ என்றும் வினவுகிறாள்.

கூனியாகிய மந்தரை கூறும் கொடிய சொற்களைப் பற்றிப் பேசும் கம்பர் அவளது எல்லை கடந்த கோபத்தை

"தெழித்தனள், உரப்பினள், சிறுகண் தீஉக
விழித்தனள், வைதனள், வெய்து உயிர்த்தனள்
அழித்தனள், அழுதனள், அம்பொன் மாலையால்
குழித்தனள், நிலத்தை அக்கொடிய கூனியே"

என்ற வரிகள் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறான். இத்தனை வாதங்களும் அச்சுறுத்தல்களும் கைகேயியிடம் தோற்றுப் போகின்றன. தீயுரை மொழிந்த கூனியைக் கடிந்து பேசுகிறாள். மூத்த மகனுக்கே அரசுரிமை என்ற நியதியை எடுத்துக்காட்டுகிறாள். தனக்குப் பழிவந்து சேரவே வழி சொல்வதாக இடித்துரைக்கின்றாள். மேலும் தன்னை விட்டு தொலைந்து போகச் சொல்லுகிறாள் கைகேயி.

ஆனால் கூனி விடுவதாயில்லை. அரசு இராமனுக்கே என்றாதனால். கோசலையின் கையை எதிர்பார்த்துத்தான் கைகேயி நிற்கவேண்டிவரும் என்றும், செல்வம் வந்த வேளை மனந்திரிதல் இயற்கை என்றும் கூறுகின்றாள். மேலும் கைகேயியின் தந்தையான கேகய மன்னனுக்கு மிதிலையின் மன்னன் சனகன் பகையென்றும் கேகயனின் மருமகன் பேரரசன் தசரதன் என்பதர்தான் சனகன் அமைதி காப்பதாகவும். அயோத்தி அவன் மருகன் இராமனுக்கு வந்துற்ற வேளை கேகயனுக்கு ஆபத்து என்றும், பிற பகைவர்களும் கேகயனுக்கு அயோத்தியின் துணை இல்லை என்று உணர்ந்தால் போர்தொடுப்பரென்றும் கூறுகிறாள். கைகேயின் தாய்வீட்டுப் பாசத்தை தூண்டும் தூண்டிலை மந்தரை மந்திரமாக வீசுவதைக் கம்பர். மற்றும்

"நுந்தைக்கு வான்பகை பெரிது உள மறத்தார்
செற்றபோது இவர் சென்று உதவார் எனில் செருவில்
கொற்றம் என்பது ஒன்று எவ்வழி உண்டு ? அது கூறாய்
சுற்றம் கெட சுடுதுயர்க் கடல் விழத் துணிந்தாய்"

என்ற வரிகள் மூலம் புரிய வைக்கிறார். இப்போது கைகேயின் மனம் மாறுபடுகிறது. கூனி தன் முயற்சியில் வென்று விட்டாள். அவள் வாதத்திறனை என்னவென்று உரைப்பது ? கூளியின் மந்திரச் சொற்கள் மங்கையற்கரசி கேகயத்தாளை மாற்றிய உண்மையை

"தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திருந்தது"

என்ற கம்பனின் வரிகள் காட்டுகின்றன. கூனி முதலில் ஆபத்து நெருங்குவதாக அதிர்ச்சி கொடுத்துப் பார்க்கிறாள், பயனில்லை. பின் சுயநலத்தைச் சுட்டிக் காட்டுகிறாள், பயனில்லை. அவளது பெருங்குடிப் பிறப்பையும், பேரரசியாய் வாழ்வதையும் இழக்க நேரிடும் என்று சுய மரியாதையைச் சீண்டுகிறாள், பயனில்லை. இராமனுக்கு நாடென்றால்

பரதனுக்குக் காடா என்று குதர்க்கம் பேசுகிறாள் பயனில்லை. கடைசியில் பிறந்த வீட்டின் மேல் பெண்கள் வைத்துள்ள பாசத்தை, அம்மென்மை யுள்ளத்தை. அரசியற் சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி தொட்டுப் பார்க்கிறாள். வென்று விடுகிறாள். அதனால் தான் கைகேயி

"இரைத்த வேலை சூழ் உலகம் என்ஒரு மகற்கு ஈந்தாய்
தரைக்கு நாயகன் தாய் இனி நீ"

என்று கூனியை ஞானி எனப் போற்றுகிறாள். இரக்கத்தின் இருப்பிடம் வண்மையின் உறைவிடம், உண்மையின் புகலிடம், இராமனைத் தன் சேயாகவே நோக்கிய தாய் தெய்வக் கற்பினள் கைகேயியின் மனத்தையே மாறுபடச் செய்தவள் கூனி ! ஏன்? உடலில் ஏற்பட்ட ஊனத்தால், உள்ளமும் ஊனமாகிவிட்டதா கூனிக்கு ? அந்த மனவிகாரத்தால் விளைந்தது தான் இந்த ஆட்சி மாற்றமா?

அல்லது 'பண்டை நாள் இராகவன் பாணிவில் உமிழ்உண்டையை' நினைவில் இருத்தி தன் ஆத்திரம் தீர கூனி பழி வாங்கினாளா? அவ்வாறெனில் வெறும் தாதி ஒருவளின் பழியுணர்ச்சியால் இராமன் ஆட்சியை இழந்தானா? அவ்வளவுதான் இக்கதையின் திருப்புமுனையா?

அல்லது கேகயனின் மகள் மணமுடித்துத் தன் கணவனின் நகருக்குச் சென்ற போது அவளுக்குத் துணையாக, தாதியாக அனுப்பப்பட்டவளாதலால் தன் அரசனுக்கும், தலைவிக்கும் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக விடாப்பிடியாக வாதம் செய்து கைகேயியின் மனம் மாறுதலைடையச் செய்தாளா கூனி? அவ்வாறெனில் தனிப்பட்ட ஒருவளின் நன்றியுணர்வுதான் இக்கதையையே மாற்றிவிட்டதா? "உன் மாற்றவள் தாதியர்க்கு ஆட்செயத் தரிக்கிலேன்" என்று வீராப்புடன் கூறுகிறாளே கூனி, அவளென்ன அத்தனை திமிர் பிடித்தவளா? அல்லது தசரதன் கைகேயிக்கு அளித்திருந்த இரு வரங்களையும் பெற்று அதன் மூலம் பரதன் அரசுக்கட்டில் ஏறவும், இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவும் ஏற்பாடு செய்கிறாளே அவளென்ன நீதி தேவதையா ? அயோத்தியின் அரசாட்சியை பதினான்கு வருடங்கள் பரதனுக்கும், அதன்பின் இராமனுக்கும் பங்கு போட்டுத்தர?

யார் இந்தக் கூனி ? கம்பரைத்தான் கேட்கவேண்டும். "ஐயிரு தலையினோன் அனுசர் ஆதியாம் மெய்வலி அரக்கரால், விண்ணும் மண்ணுமே செய்தவம் இழந்தன" என்று தேவர்கள் முறையிட, அவ்வரக்கர்கள் "வரமும்

வாழ்வும்..... கணைகளால் நீறு செய்ய யாம்..... தசரதன் மதலையாய் வருதும்" என்று திருமால் பதிவுரைந்து அதன்படியே இராமனாக அவதரித்தான் என்பது தான் இராமாயணம். ஆக இராவணனையும், அவன் தம்பியர் முதலிய கூட்டத்தாரையும் அழிப்பதுதான் இராம காதையின் குறிக்கோள்.

இராம காவியத்தில் 'இராவண வதம்' என்ற முடிவை நோக்கி கதை செல்ல சில பல திருப்பங்களை கம்பர் கையாளுகிறார். 'கூனியின் வாதம்' அரசுக்கட்டில் ஏறவேண்டிய இராமனை வனவாசம் செல்லச் செய்கிறது முதல் திருப்பம். 'சூர்ப்பனகையின் மானபங்கம்' தான் இராமனையும், சீதையையும் இராவணனுக்கு அறிமுகப்படுத்துகிறது. இது. இராண்டாம் திருப்பம். 'மாயமான் மாரீசனின் மரணம்' சீதையை இராவணன் கவர்ந்து செல்ல வழி வகுக்கிறது. இது மூன்றாம் திருப்பம். 'சடாயுவின் வீரமரணம்' சீதையைத் தூக்கிச் சென்றவன் இராவணன் தான் என்று காட்டிக் கொடுக்கிறது. இது நாலாவது திருப்பம். இந்தத் திருபங்களிலெல்லாம் கம்பர் சில பாத்திரங்களை காரணிகளாக மட்டுமே பயன்படுத்துகிறார். எனவே அப்பாத்திரங்களை அவர் விரிவாகப் படம் பிடித்துக்காட்டவில்லை.

அதனால்தான் கம்பர் தன் காவியத்தில் கூனியை அறிமுகப்படுத்தும் போது 'இராவணன் இழைத்த தீமைபோல்' தோன்றினாள் என்று கூறுகிறார். ஆகவே கூனி எனப்படும் மந்தரை 'இராவணனின் தீவினைப்பயன்' என்று நாம் தெள்ளிதின் அறியலாம். இந்த 'தீவினைப்பயன்' ஏதேனும் ஓர் காரணியாகப் (Causative Factor) செயல்படலாமே தவிர, தனித்துவ பாத்திரமாக (Individual Character) நடமாடயியலாது. எனவே தான் கம்பர் கூனியென்ற பாத்திரப் படைப்பைப் பற்றி விரித்துரைக்க முன் வரவில்லை. ஆயினும் இப்பாத்திரம் தான் இராமாவதாரத்தின் குறிக்கோள் நிறைவேற முதற் காரணமாய் உள்ளது என்றால் அது மிகையல்ல !.

சிறிய பாத்திரமும் பெரிய செய்தியும்

(ஸ்ரீ ராமநாமப்பரதேசி)

கம்பனது காவியத்தில் பெருங்காரியங்களைச் செய்தவர்களும் சிறு சேவை செய்த சிறு பாத்திரங்களும் உண்டு. எண்சாண் உடம்பிற்கும் தலைமையான தலைப்பாகத்தின் நெற்றியில் ஒரு சிறு குங்குமப்பொட்டு இட்டுவிட்டால் முகத்திற்கே அழகு வந்துவிடுகிறது. அதனால் அந்த உடலையே தெய்வீகமாக எண்ணும்படி நமக்கு உணர்ச்சி ஏற்படுகின்றதன்றோ? அத்தகைய பாத்திரங்களில் ஒரு பாத்திரமே நீலமாலை ள்னக் காட்டியருளினான் தமிழ் நாட்டுக் கவிஞனான கம்பன்.

அறுபதினாயிரர் பேர் (வால்மீகி ஐயாயிரம் பேர் எடுத்து வந்தனர் என்றார்). கம்பனைக் கேட்டபோது நானும் அதைத்தானே கூறினேன். பதினாயிரத்தை இரண்டாக அறுத்தால் ஐயாயிரம் தானே எனக் கம்பன் விடையளித்தார் என்பர்) எடுத்து வந்தவில்லை இராமபிரான் சீதாபிராட்டியின் திருக்கழுத்தில் அணிவிக்கக்கூடிய மாலைபோல் மிகமிக எளிமையாக எடுத்தார். வளைத்ததெல்லாம் தெரியவில்லை எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார். என்றார் கம்பன்.

நீல வண்ணனான இராமபிரான் வில்லை முறித்ததால், பிராட்டி அவருக்கு மாலையிடும் பேறு பெற்றார் என்ற செய்தியைச் சொல்ல வந்த தோழியையே நீலமாலை எனப் பெயரிட்டுவிட்டார் போலும் நந்தமிழ் நாட்டுக் கவிச்சக்கரவர்த்தி.

நெடுந்தடம் கிடந்த கண் என்று இராமபிரான் வில்லறுத்த காட்சியைக் கண்ட கண்களை வர்ணிக்கிறார் கம்பன். பெரியோனான இராமபிரானைச் சிறு கண்களால் காணமுடியாது. காதளவு நீண்டு பரந்து சென்ற கண்கள், காதுகளிடம் என் பாக்யம் இவ்வழகான இராமபிரானைக் கண்டேன். அவன் பெருமையை நீங்கள் கேட்டு மகிழ்ச்சியடைந்தீர்களா ? அந்தபாக்கியம் உங்களுக்குக் கிடைத்ததா? எனக்கண்கள் சென்று காதுகளைக் கேட்டன என்றார் போலும்,

சீதாபிராட்டி ஒரு தாமரைக் குளத்தின் அருகில் அமர்ந்து ஏ தாமரைத்

தடமே நான் கண்ட பெருமானின் பச்சை மாமாமலை போல் மேனியின் அழகை உன்னிடமிருந்த பச்சை நிறமுள்ள தாமரை இலைகளால் காட்டியருளினாய் அவருடைய உள்ளம் எத்தகையது எனக்காட்டி என் உயிரை தரலாகாதா எனத் தனக்குள் வேதனையுற்று அமர்ந்திருந்திருந்த மயில் இயல்பினளான சீதாபிராட்டியிடம் தனது ஆபரணங்கள் வானவில் போல் ஒளிவிட்டு விசவருகிறாள் நீலமாலை. மயில், மழையின் சின்னங்களான வானவில்லையும் இடிமுழக்கத்தையும் கேட்டு மகிழ்ந்து ஆடுமன்றோ சீதாபிராட்டியை மகிழ்விக்கச் செய்யும் செய்தியைக்கூற வந்த நீலமாலை.

தன் அருமைத் தலைவியினது மனத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கப் போகிறோம் என்ற அளவில்லா ஆர்வத்திலே தானே ஆடிப்பாடித் தன்னையே மறந்து விட்டாள் நீலமாலை. சீதை தன் எஜமானி என்பதைக் கூட மறந்து விட்டாள். இத்தனை மகிழ்ச்சிக்கு காரணம் என்ன? என்ன நடந்துள்ளது? எனப்பிராட்டிக் கேட்க, தன் தலைவி என்று நினைவுவர, வணங்கிப் பேசலானாள் என்கிறார் கம்ப நாடகம் பாடிய கவியரசர்.

ரொம்பவும் வேதனையான செய்தியானால் உடனே செய்தி கூறி ஆறுதல் அடையச் செய்யவேண்டும். தேவியை நீங்கி வருந்திய இராமபிரானை உடனே களிப்படையச் செய்ய கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால் என்றார் சொல்லின் செல்வனான அனுமான்.

நல்ல செய்தியை சுற்று வளாதலுச் சொல்வதில் இன்பம் அதிகம் அன்றோ ! எனவே செய்தியை வளாததுகிறாள் நீலமாலை நான்கு விதமான சேனைகளையும் உடையவன் தயரதன் எனப்பெயருடைய மன்னவனின் மகன் தருகை நீண்ட தயரதன் என்ற பெயருக்கு ஏற்ப மழைபோல் வாரி வழங்கும் கொடையாளியின் மகன். மன்மதனைக் காட்டிலும் அழகியவன் எனக்கூறும்போது சீதாபிராட்டி ஏதோ சாதாரணமான செய்தி கேட்பது போலிருந்தாள்.

கம்பீரமான தோள்களையும். திருமாலே மனித உருத்தாங்கி வந்துள்ளானோ என ஐயுறும் வல்லமை படைத்தவன். இராமன் என்பது பெயர் என்றெல்லாம் நீலமாலை கூற, அசையாதிருந்தாள், தன் தம்பியொடும் முனிவருடனும் மிதிலைக்கு வந்துள்ளான் எனக் கூறியபோது. பிராட்டி திடுக்கிட்டு, தம்பியுடனும் முனிவருடன் வந்தவருக்கு என்ன என ஆவலுடன்

நிமிர்ந்து கேட்டனள். திரண்ட தோள்களையுடைய அந்த இராமன் ஜனகரின் கட்டளையின்படி வந்து சிவதனுசைக் காணவந்தான் என்றபோது சீதாபிராட்டியின் ஏக்கம் நிறைந்த ஆவல் உச்சம் அடைந்து விட்டது. “உலகமே நடுங்கியது ஒரு நொடிப் பொழுதில் காலால் ஒரு முனையை மிதித்துக்கொண்டு, முன்னமேயே வில்லின் வலிமையை அறிந்தவன் போல் வளைத்திட்டான். வில் ஒடிந்தது எனக்கூறாமல் அந்த ஓசையால், உலகமே நடுங்கியது” என்றாள்.

முனிவருடன் வந்த வீரன் வில்லை முறித்தார் எனக் கேட்டவுடன் “ஆம் ! நாம் கன்னிமாடத்திலிருந்து கண்ட இளைஞர்தாம்” என மகிழ்ச்சி கொண்ட சீதை உடல் தடித்தாள். அவளது இடை பருத்தது.

சிறிய பாத்திரமான நீலமாலை நீலவண்ணனுக்குச் சீதாபிராட்டி மாலையிடும் நற்செய்தி கூறி பிராட்டியை மகிழ்வித்தாள் அவளை நமக்கு அறிமுகப்படுத்திய கம்பனையும் அப்பெருமான் பாடியருளிய சீதாராமர்களையும் வணங்கி வாழ்வோமாக !

வஞ்ச மகள்

புலவர். இரா. சந்திரசேகரன்,

இராமகாதையின் முதல் திருப்புமுனை மந்தரை, கைகேயி இருவரும் ஆற்றிய சூழ்ச்சியும் கேட்ட வரங்களுமென்றால், அடுத்த திருப்புமுனை மிக முக்கியமான திருப்புமுனை சூர்ப்பணகையின் வருகையும் செயல்களும் ஆகும்.

ஆரண்யத்தில் சூர்ப்பணகை இராமனைக் கண்டு, காமம் கொண்டு, சீதையைத் தூக்க முற்பட்டு, இலக்குவனால் பங்கப்படுத்தப்படவில்லை யெனின், இராவணன் மனத்தில் சீதையைப் பற்றிய காமத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யவில்லையெனின், இராவணன் அரக்கர் குலத்தோடு மடிய நேரிட்டிராது. இராமாவதார நோக்கமும் நிறைவேறியிராது.

அழகே உருவான சீதாதேவி அருகில் இருக்கும்வரை, இராமன் தன்னை ஏற்கமாட்டான், அவளை அப்புறப்படுத்துவதே சாலச் சிறந்தது என்று கருதிச் சீதையைத் தூக்க முற்படும் சூர்ப்பணகை பின்னால் இராணனிடம் பேசுகையில் அவனுக்காகவே சீதையைக் கவர முற்பட்டதாக மாற்றிக் கூறுகிறாள். சீதாதேவியின் அழகைப் பலபடப் புகழ்ந்து, இராவணன் மனத்தில் அளவிடமுடியாத காமத்தை உண்டாக்கி, மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்திடக் காரணமாகிறாள். அதனால், சிவன் இருந்த நெஞ்சத்தில் சீதையை வைத்ததால், கடவுள் இருந்த நெஞ்சில் காமம் நுழைந்ததால், அக்காமம் உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து இராமன் வாளி தடவும் நிலை ஏற்படுகிறது.

ஒரு குற்றத்தைச் செய்பவருக்கு வழங்கப்படும் தண்டனையைவிட, அக்குற்றம் புரியத் தூண்டியவருக்கே கூடுதலாகத் தண்டனை தரவேண்டுமென்பர். சீதாதேவியை அபகரித்ததால் இராவணன் மரண தண்டனை பெற்றானென்றால், அக்குற்றத்தை அவன் புரிய முழுமுதற் காரணமாக இருந்த சூர்ப்பணகைக்கு உரிய தண்டனை கிடைக்கவில்லையே ஏன்?

மூக்கும் செவியும் அறுபட்டு மானபங்கப்படுத்தப்பட்ட தண்டனை, சீதையைக் கவர முற்பட்டமைக்கே தவிர, இராவணனின் காமத்தைத் தூண்டியதற்காக அன்று, இராவண வதத்தோடு சூர்ப்பணகை வதம் நடைபெற்றதாக இலக்கியத்தில் பேசப்படவில்லை. எனின், சூர்ப்பணகைக்கு

இராவணன் முன்னரே இழைத்த ஒரு கொடும் குற்றத்திற்காகவே அவள்மூலம் இராவணன் பழிவாங்கப்பட்டான் எனக்கொள்ள இயன்றால், குற்றம் புரியத் தூண்டியவருக்கு உரிய தண்டனை கிடைக்கவில்லையே என்ற கேள்வி எழ வாய்ப்பில்லாமற் போகும். அது அப்படித்தானா? சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சூர்ப்பணகைப் படலத்தில் அவளை அறிமுகப்படுத்தும் கவிச்சக்கரவர்த்தி கம்பர்,

"நீல மாமணி நிற நிருதர் வேந்தனை
மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான் விளை
காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் அனாள்"

என்று கூறுவதை எண்ணிப் பார்க்கின்றோம். இராவணனை வேரோடு அழியும்படி, ஒழிக்கக்கூடிய வல்லமை உடையவள் என்று பேசும்போது மொய்ம்பு என்ற சொல்லின் ஆழத்தை எண்ணிப் பார்க்க வேண்டும், உயிர்தோன்றிய முற்காலத்தில், அந்த உடலோடு கூடவே தோன்றி, தான் வெளிப்படுவதற்கு உரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு அவ்வுயிரோடு கூடவே தங்குகின்ற கொடிய நோயை ஒத்தவள் என்று கூறும்போது தான் விளை காலம் ஓர்ந்து என்று கூறுவது, இராவணன் அழிவை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு, அவ்வாய்ப்பு வரும்வரை கூடவே தங்கியிருந்தாள் என்ற கருத்தைப் புலப்படுத்துவதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இராமன் தங்கி இருந்த சோலைக்குச் சூர்ப்பணகை வரும் காட்சியைக் கூற வந்த கம்பர்,

"வெய்யது ஓர் காரணம் உன்மை மேயினாள்"

என்கிறார். மிகக் கொடியதான ஒரு காரணம் இருப்பதால் இராமன் தங்கியிருந்த சோலைக்கு வந்து சேர்ந்தாள் என்று கூறும் கம்பர், கொடியதாகிய அந்தக் காரணம் என்ன என்பதை வெளிப்படையாகக் கூறாமல் விட்டு விடுகிறார். அது ஏன்? அந்தக் காரணம் என்ன?

அடுத்த பாடலில், *"அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக் கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்"*

என்பர் கம்பர். அவளது குணாதிசயத்தைக் கூறுவதற்காக அவ்வாறு

கூறினார் என்றாலும், மிக அழுத்தமாக,

"தன் கிளைக்கு இறுதி காட்டுவாள் என்று வலியுறுத்திச் சொல்லும்பாங்கு எண்ணற்பாலது.

அவளது அழகுத் தோற்றத்தை வருணிக்க வந்த கம்பர்,

"வஞ்சி என நஞ்சம் என வஞ்சமகள் வந்தாள்" என்று கூறுகிறார். அரக்கி என்ற முறையில் பொதுவாக வஞ்சமகள் என்று கூறினாரென்றாலும், இராமன் மீது அடங்காத காமத்தோடு, நெஞ்சில் எதிர்பார்ப்போடு வரும் சூர்ப்பணகைக்கு, இராமன்மீது அந்த நேரத்தில் எந்தவிதமான வஞ்சமும் சூழ்ச்சியும் இருப்பதற்கு உறுதியாக வாய்ப்பில்லை. எனவே, வஞ்சனை நிரம்பியவள், வஞ்சக உள்ளம் கொண்டவள் என்றால், அந்த வஞ்சம் யார்மீது? என்று கேள்வி நம்முள் எழுகின்றதன்றோ?

இராமனோடு உரையாடும்போது "முன்னம் தேவர்ப் பராவினென் நீங்கினேன் அப்பழிபடு பிறவி" என்கிறாள் சூர்ப்பணகை. அரக்கர் குலத்தைப் 'பழிபடுபிறவி' என்பதும், நான் அக்குலத்தை விட்டு விட்டேன் என்று கூறுவதும் நோக்கற்பாலது.

மூக்கு அறுபட்ட நிலையிலும் இராமன் மீது கொண்ட தனது காதலை வெளிப்படுத்த முற்படும் சூர்ப்பணகை, "என்னை நீ ஏற்றுக் கொண்டால், இராவணனையும் மற்ற அரக்கர்களையும் மிக எளிதாகக்

"கொல்லலாம் மாயங்கள் குறித்தனவே
கொள்ளலாம் கொற்றம் முற்ற
வெல்லலாம் அவர் இயற்றும் வினை எல்லாம் கடக்கலாம்". என்றும்,

"தாம் பொறியின் பல மாயம் தரும் பொறிகள்
அறிந்து அவற்றைத் தடுப்பென் அன்றே
பாம்பறியும் பாம்பின்கால் என மொழியும்
பழமொழியும் பார்க்கிலீரோ"

என்றும் பேசும் போது, அரக்கர்கள் மற்றும் இராவணன் அழிவில் அவளுக்கு மறுப்பு ஏதும் இல்லை என்பது புலனாகிறது. எல்லாவிதமான உதவிகளும் செய்துதர அவள் தயாராக இருப்பதும் புலனாகிறது. மேலும்", நீ நான், இலக்குவன் மூன்றுபேரும் ஒன்று சேர்ந்தால் அரக்கர்களை மிக எளிதில் வெல்லலாம். போர்க்களத்தைக் குருதிக் குளமாக்கி வெற்றி கொள்வோம். கொடிய வலிமை கொண்ட அரக்க வீரரைக் கொன்ற பிறகு சூரியன்

சந்திரன் என்னும் இரண்டு கோள்களையும் சிறைவைத்த இராவணனுக்கு இளையவளாகிய நான், அவனுக்குப் போரில் இளைக்க மாட்டேன் என்னும் உண்மையை உணர்ந்து, உன் தம்பியோடு அவன் மனைவியாக என்னை இருக்கச் செய்" என்று கூறுகிறாள்.

"நிருதரோடும்
களம்கோடற்கு உரிய செருக் கன்னியக்கால்
ஒரு மூவேம் கலந்த காலை
குளம்கோடும் அன்றே அக்கொடிய திறல்
வீரர்தமைக் கொன்ற பின்னர்
இளங்கோவோடு எனை இருத்தி இருகோளும்
சிறை வைத்தார்க்கு இளையாள் என்றே"

இப்பாடலில், இராமன் இலக்குவனோடு தான் கூட்டணி அமைத்து, அரக்கர்களை அழிக்க அவள் காட்டும் வேகம் புலப்படுகிறது.

சீதாதேவியின் பேரழகை இராவணனிடம் சூர்ப்பணகை எடுத்துச் சொல்லுமிடத்தில், கம்பன் கவிதைகளில் வெளிப்படைப் பொருள் ஒன்றும், ஊடகமாக வேறொரு பொருளும் இருப்பதுபோல அமைந்துள்ள கம்பசித்திரத்தைக் காண்கின்றோம்.

"இந்திரன் சசியைப் பெற்றான். சிவனோ உமையைப் பெற்றான். திருமாலோ திருமகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய் நீயும். அவர்களைவிட நீயே நன்மை பெற்றாய்" என்று சூர்ப்பணகை கூறும்

"அந்தரம் பார்க்கின் நன்மை
அவர்க்கு இலை உனக்கே ஐயா"

என்னும் இவ்வரிகளில், இராவணனைப் பாராட்டுவது போல நேர் பொருள் இருந்தாலும். "அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு இல்லை உனக்கு" என்று கூறலாம் பாங்கும் இருப்பதை எண்ணிப் பார்க்கின்றோம்.

"பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான், அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னை வென்றநுண் இடையினாளை
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி"

எனும் பாடலில், 'சீதையை நீ அடைந்தால் அவளை எந்த இடத்தில்

வைத்துக் கொண்டு வாழ்வாய்' எனும் நேர்பொருளும், "சீதை கிடைத்தால் அவளை வைத்து நீ எங்கே வாழப் போகிறாய்" என்ற மறைபொருளும் கண்டு வியக்கின்றோம்.

"பிள்ளைபோல் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோகின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய
வள்ளலே உனக்கு நல்லேன் மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம் கேடு சூழ்கின்றேன் அன்றே"

எனும் பாடலில் "பிழைக்க மாட்டாய்" "கொள்ளை போகும் செல்வம்" "உன் மனைவியர்க்கு நான் கேடு செய்கின்றேன்" என்பன போன்ற மறை பொருள்கள் தொனிப்பொருளாக உள்ள கம்ப சித்திரத்தைக் காண்கின்றோம். அந்த உட்பொருள்கள் கவிநயமா? அல்லது உண்மையிலேயே சூர்ப்பண கையின் உட்கருத்தா? எண்ணிப் பார்க்கின்றோம்.

இராவண வதம் முடிந்துவிட்டது. மும்மடங்கு பொலிந்த முகத்தினனாய்த் தரைமீது கிடக்கும் தமையன் உடல் கண்டு வீடணன் புலம்புகின்றான்.

"கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்று
அதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து
பல்லாலே இதழ்அதுக்கும் கொடும்பாவி
நெடும்பாரப் பழி தீர்ந்தாளோ"

"கொல்லத்தகாத மைத்துனனைக் கொன்றாய் என்பதற்கு ஈடாக கொடுமை செய்யச் சூழ்ச்சி செய்து பல்லாலே உதட்டைக் கடிக்கும் கொடும்பாவியான சூர்ப்பணகை தனது நெடுநாட் பகைக்குப் பழி தீர்த்துக் கொண்டாளோ" என்ற வீடணனது ஐயம் நமக்கும் ஏற்படுகின்றது.

சூர்ப்பணகையின் கணவனை இராவணன் கொன்ற வரலாறு கம்பன் கதையில் விரிவாக இடம் பெறவில்லை. ஆனால் ஒட்டக்கூத்தர் இயற்றிய உத்தர காண்டத்தில் அந்த வரலாறு விரிவாகக் காணப் படுவதுடன் சூர்ப்பணகையின் கோபமும், ஆவேசமும்,அவள் அண்ணன்மீது கொள்ளும் வஞ்சமும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

இராவணன் தன் தங்கை சூர்ப்பணகைமீது காதல் கொண்ட வித்துருசிங்கன் எனும் காலகேய வம்ச வீரனுக்கு மணம்முடித்து வைக்கின்றான்.

சூர்ப்பணகை நலத்தைக் கண்டு

"விடல் ஒல்லேன் என விரும்பும் வித்துருசிங்
கேசனுக்கு விதியின் ஈந்தான்". (ஒட்.உத்தர.239)

காதல் திருமணம் புரிந்த சூர்ப்பணகையும் வித்துருசிங்கனும் மனம் ஒத்து, ஈருடல் ஒருயிராய் உவப்புடன் வாழ்கின்றனர்.

திக்குவிசயம் செய்யும் இராவணன் மணிமதி என்னும் நகரைக் கடந்து, வருணனின் கல்நகர் எனும் நகரை நெருங்கி, காலகேயர்களை எல்லாம் கணநேரத்தில் கொன்று குவித்தான். அப்போரில் காலகேயரில் ஒருவனாகிய வித்துருசிங்கனும் இராவணனால் கொல்லப்படுகிறான்.

"அந்நகரி விட்டு அரக்கன் அடல் வருணன்
தனைவெல்வான் அவன்தன் மேவும்
கன்னகரி தனைமுட்டிக் காலகேயரை
யெல்லாம் கணத்திற் கொன்று
தன்னுடைய தங்கையாம் சலமிகுந்த
சூர்ப்பணகை தன்னைக் கொண்ட
பின்னனைய சுடர் இலைவேல்
வித்துருசிங்கன் தனை வெங்களத்து வீழ்த்தான்" (ஒட். உத்தர.410)

காதல் கணவன் இறந்த செய்தி அறிந்த சூர்ப்பணகை அழுது புலம்பும் காட்சியைப் பல பாடல்களில் ஒட்டக்கூத்தர் விரிவாகக் கூறுகிறார்.

"முன்னரே என்னை உனக்கு முறைப்படி, தானே திருமணம் செய்துகொடுத்துவிட்டுப் பின்னர் நான் மங்கலநாண் இழக்குமாறு உன்னைக் கொன்ற என் அண்ணன் மூவுலக நாயகனாக ஆள, நான் அதனைப் பார்த்து உடல் சுமந்து உயிர்சுமந்து வாழ்வேனோ?" என்று புலம்புகிறாள் சூர்ப்பணகை.

"முன்னமே தானென்னை முறைமையாலே கொடுத்துப்
பின் எனைநூல் இழப்பித்த இராவணனாம் என்தமையன்
தன்னை மூவுலகாள யான்கண்டு தார் அவுணர்
மன்னனே உடல் சுமந்து வாழ்வேனோ வாழ்வேனோ" (ஒட்.உத்தர.428)

"கரிய மையைக் காட்டிலும் கரிய மனத்தைக் கொண்ட இராவணனின் உடலை முறிக்க முடியவில்லையே எனக் கருதித் தரையில் கிடக்கின்றனையோ"

"மைம்முறித்த கருமனத்து வாளரக்கர்கோமானை
மெய்ம்முறிக்கப் பெற்றிலேன் என நினைந்தோ"

என்று புலம்புகின்றாள். *(ஒட்.உத்தர 429)*

கணவன் உடலை எரியூட்டிவிட்டு இராவணனைச் சென்று கண்டு நீதி கேட்கப் புறப்படுகிறாள்.

"தாக்கியே காதலனைத் தரைப்படுத்த தசமுகனார்
நாக்கினை நான் பிடுங்கி என்தன் நடலை நோய் அதுதீரப்
போக்குவேன் என் உயிர் என்று சூர்ப்பணகை புறப்பட்டாள்"

(ஒட்.உத்தர.432)

"உயிர்காக்கும் முலைப்பாலே உயிரை உண்ணும் நஞ்சானாற்போல, கொல்லத் தகாத காக்கத்தக்க மைத்துனனைக் கொலை செய்த, புன்தொழில் வல்ல உன் அண்ணன் பெரும்பாவியாவான் என்று கூறி உலகத்தார் எல்லாம் என்னைத் துன்புறுத்தலால் நான் மிக வருந்துகிறேன்" .

"முலைப்பாலே நஞ்சாகி முனைமுகத்து ஒருக்காலும்
கொலைப்பாலன் அல்லாத்தன் மைத்துனனைக் கொலை சூழ்ந்த
புலைப்பாவி உன்தமையன் பொல்லான் என்றெல்லாரும்
அலைப்பாலே அற அலைந்தேன் அண்ணாவோ அண்ணாவோ"

(ஒட். உத்தர.435)

"காசுக்காக, பொன்னுக்காக, மோதிரம் முதலான அணிகளுக்காக, கடுஞ்சொல் மிகுதிக்காகச் சினம்கொண்டு மாப்பிள்ளைகள் கோபம் கொள்வார்கள். அவர்களைச் சமாதானம் செய்து போற்றுவார்கள். இதுவே உலகியல், ஆனால், மாப்பிள்ளையைக் கொன்று மண்ணில் புரட்டுவார்களோ?"

(ஒட். உத்தர.436)

"மாப்பிள்ளை மிகையான குற்றங்களைச் செய்தாலும் அவற்றை விளையாட்டு என்று கருதுவதேயன்றி, ஒருபோதும் மைத்துனரோடு பகை கொள்வதில்லை என்னும் அந்தப் பழமொழியையும் நீ எண்ணிப் பார்க்கவில்லையே ! சிவபெருமானின் கயிலாய மலையைத் தூக்கி என்ன பயன்? ஓ ! அண்ணா ! என்ன கொடுமை செய்து விட்டாய்?" *(ஒட் உத்தர.437)*

"உன்குடியில் உன்னுடன் பெண்ணாகப் பிறந்த நான் பெருந்துன்பம் அனுபவிக்க நீ மகிழ்ச்சியுடன் உலகாளுதல் அரசர் குலத்துக்கு அறமா? சிறிதும் எண்ணிப் பார்க்காமல் என் கணவரைக் கொன்றாயே இதைப் பார்த்த தேவர்கள் என்ன கூறுவார்கள் ?"

"பெண்ணாகி உன்குலத்துப் பிறந்தாள் பேர்இடும்பை உற
அன்னாநீ அரசாளல் அரசர்குலத்து அறன் ஆமோ ?
என்னாது என் காதலனை இகலமருள் உயிர் உண்டாய்
வின்னார் என் கூறுவர் என விம்மி வெய்துயிர்த்தாள்"

(ஒட்.உத்தர.440)


இராவணன் உண்மையறிந்து வருந்தித் தங்கையைச் சமாதானம் செய்து விதியாரைத் தடுக்க வல்லார் உண்டோ? என்று தேற்றித் தண்டகாரண்யத்தில் சகல வசதிகளும் செய்து தந்து, அவளை அங்கே இருக்கச் செய்கிறான் என்பது வரலாறு.

சாதாரணமாகவே பெண்களின் மன ஆழம் காண இயலாது என்பார்கள். அதிலும், அரக்கியாகிய சூர்ப்பணகையின் அடிமனத்து வஞ்சமும் பழியுணர்வும் எத்தகையன என யாரால் அறிய இயலும்?

இராவண வதம் இயல்பாய் நடந்ததா? அல்லது, வீடணன் கூற்றுப்படி வஞ்சகச் சூர்ப்பணகை திட்டமிட்டு, சூழ்ச்சி செய்து வஞ்சம் தீர்த்தாளோ நாம் அறியோம். ஆனால்மண்டோதரி கூற்றுப்படி அச்சூர்ப்பணகை இழந்த மூக்கு புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற்று என்பதே உண்மை.

கம்ப சித்திரத்தின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் அரிய படைப்பு சூர்ப்பணகை பாத்திரம்.

நாடகப் பாங்கும், நகைச்சுவைச் சிறப்பும் நயமான நளினமான உயரிய கவிதைகளும் நிறைந்து விளங்கும் சூர்ப்பணகைப் படலமும், சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலமும் கவிச்சக்கரவர்த்தியின் கவித்திறனுக்குச் சான்றாகத் திகழ்கின்றன.



தெய்வத்தாய் - சபரி

(இலட்சியக்கவிஞர். வி.கே.கஸ்தூரிநாதன், M.A., M.Ed.,)

முன்னுரை

அனைத்து உயிர்களும் அன்பால் உருகி ஆனந்தமாகச் சொல்லும் சொல் 'அம்மா' என்பது ஆண்டவன் கூட 'அம்மா' என்று அழைப்பதில் அகமகிழ்கிறான். சொர்க்கத்தை விட சுகம் தரக்கூடியது அம்மாவின் மடி என்று வீரத்துறவி விவேகானந்தர் கூறுகிறார். 'இருக்கும் பிடிசோறும் தனக்கென்று எண்ணாமல் கொடுக்கும் தெய்வம் தாய்' என்பது கவியரசர் கண்ணதாசனின் கூற்று, கவிச்சக்கரவர்த்தி கம்பரும் தாயின் பெருமையை, அன்னையின் அன்பை, மாதாவின் மாண்பை தான் படைத்த இராம காதையில் வாய்ப்பு கிடைக்கும்போ தெல்லாம் வலியுறுத்திச் சொல்கிறார் ! வடம்பிடித்துச் செல்கிறார். அவர் காட்டும் பெற்ற தாயினும் நற்றாய் சபரி ஆவாள். கம்பர் காட்டும் அந்தத் தெய்வத்தாய் பற்றி ஈண்டு சிறிது காண்போம்.

கவந்தன் காட்டும் சபரி

சடாயுவாக இருந்து சீதையைக்காக்க அறம் பேணும் மறவனாக இருந்து அரக்கன் இராவணனுடன் போர் புரிந்து புண்பட்டு சாய்ந்து கிடக்கும் சடாயு இரமனால் சாபம் நீங்கப் பெற்று 'கவந்தன்' என்ற தன் பழைய வடிவம் பெறுகிறான். வடிவம் பெற்ற அவ்வல்வில் விரன் இராமனுக்கு உதவ நினைக்கிறான். தவத்தின் வலிமையால் உயர்ந்து நிற்கும் உத்தம சபரியின் நினைவு அவனுக்கு வருகிறது. அந்தக் கருணைத் தாயைக் கண்டால் காகுத்தன் இராமனின் கவலை தீரும் என்று கவந்தன் நினைக்கிறான். தன் இதயத்தில் தோன்றும் எண்ணத்தை வார்த்தைகள் ஆக்கி வரிசைபடுத்துகிறான். இதைக் கம்பன் கவிதை வடிவில் நம் கண்முன்யி நிறுத்துகிறான். அவைதான்

"ஆயது செய்கை என்பது அறத்துறை நெறியின் எண்ணி
தீயவர்ச் சேர்க்கிலாது செவ்வியோர்ச் சேர்த்து செய்தல்
தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டு அன்னாள்
ஏயது ஓர் நெறியின் எய்தி இரலையின் குன்றம் ஏறி'

என்ற வரிகள் ஆகும். பெற்றத் தாயை விடப் பிள்ளையைப் பேணுபவர் எவரும் இருக்க முடியாது. அவள் கூட பிள்ளையின் உடலைத்தான்

பாதுகாப்பாள். ஆனால் சபரியோ இராமனின் உயிருக்கு உகந்தது செய்வாள் என்ற அரிய கருத்தை இச்சிறிய வரியில் கம்பன் நமக்குக் காட்டுகிறான்.

மதங்கன் தவப்பள்ளியில் மாதர் திலகம்

இதயத்தில் சோகத்தைச் சுமந்தபடி இராமன் தம்பி இலட்சுமணனுடன் சபரி பீடம் நோக்கிப் போகிறான். அந்த அன்னை வாழும் மதங்கனின் தவப்பள்ளியினை அடைகிறான். தாயின் மனதைப் போலவே தவப்பள்ளியும் தகுதியில் உயர்ந்து தண்மையில் குளிர்ந்து விளங்குகிறது. கம்பனின் கவிதைப் படி அங்கு *"என்னிய இன்பம் அன்றி துன்பங்கள் இல்லை, ஆன புண்ணியம் புரிந்தோர் வைகும் - துறக்கமே போன்றது அன்றே"* எனக்காட்சி அளிக்கிறது.

சபரியின் தவக்கோலம்

தெய்வம் போல் விளங்கும் சபரித்தாய் இராமனின் வரவுக்காகக் காத்திருக்கிறாள். பிள்ளை எப்போது வருவான் என்பது பெற்றவளுக்குத் தானே தெரியும். அவளது இதயத்தில் இராமனின் திரு உருவமே பெரு உருவமாக விளங்குகிறது. வில்லேந்தும் வீரன் தான் தரும் விருந்தேற்க வருவான் என்ற நம்பிக்கையில் சபரி காத்திருக்கிறாள். தனக்குக் காட்டில் கிடைத்த கனிகளையும், கிழங்குகளையும் தான் உண்டுப் பார்த்து சுவையானவற்றை மட்டுமே சேகரித்து வைக்கிறாள். சபரியின் உள்ளத்தை இராமனும் உணர்கிறான். உணர்ந்தவனாகவே வருகிறான். இதைக் கம்பன் "தன்னையே நினைந்து நோற்கும் சபரியைத் தலைப்பட்டு" என்ற வரிகள் மூலம் உணர்த்துகிறார்.

சபரியும் கண்ணப்பரும்

இராமனைக் கண்டதும் சபரியின் கண்களில் நீர் பெருகுகிறது. உள்ளம் உருகுகிறது. உவகை பொங்குகிறது. இன்பம் மட்டுமே அவள் இதயத்தில் தங்குகிறது. முற்பிறவியின் நினைவெல்லாம் அவள் முன்வந்து நிற்கிறது. எவருக்கும் கிடைக்காத சுவர்க்கத்தை அடைந்ததுபோல் அவள் களி பேருவுவகை கொள்கிறாள். இக்காட்சியை

"ஆண்டு அவள் அன்பின் ஏந்தி அமுது இழி அருவிக்கண்ணாள்
மாண்டது என் மாயப்பாசம் வந்தது வரம்பு இக்காலம்
பூண்ட மாதவத்தின் செல்வம் போயது பிறவி என்பாள்"

என்னும் அமுத வரிகளால் கம்பர் அறிமுகப்படுத்துகிறார்.

இவ்விடத்தில் நாம் ஒப்பு நோக்கி உணரத்தக்கது ஒன்றுண்டு, ஆண்டவனைக் காணும்போது பேறு பெற்று அடியார்கள் மனநிலை எப்படி இருக்கும் என்பது தான் அது.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் காளத்தி நாதரைக் கண்ட கண்ணப்பர் அன்பையும் இவ்வாறுதான் நமக்குப் புலப்படுத்துகிறார். சேக்கிழார் காட்டும் வரிகள்

"நெடிது போதுயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவிபாய
அடியனேர்க்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று
படிவிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற" என்பவையாகும்

"கம்பர் சபரி மூலமும் சேக்கிழார். கண்ணப்பர் மூலமும் காட்ட வருவது குறையில்லா அன்பின் பெருக்கே" ஆகும்.

இராமனைக் கண்ட சபரியின் அன்பும் காளத்தி நாதரைக் கண்ட கண்ணப்பரின் அன்பும் பக்தியின் உச்சநிலை என்பது நாம் உணரத்தக்கது.

அன்பு மொழியும் ஆறுதல் நிலையும்

வனத்தில் வாழும் வாஞ்சைமிகுந்த சபரியை இராமன் நோக்குகிறான். சபரியின் தவவலிமையும், அங்கு வந்து விருந்துண்டு சென்ற முனிவர்களும் அவன் மனக்கண் முன் எழுகின்றன.

'ஈசனும் கமலத்தோனும் இமையவர்யாரும் எந்தை
வாசவன் தானும் ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி
ஆசறு தவத்திற்கு எல்லை அணுகியது இராமர்க்கு ஆய
பூசனை விரும்பி எம்பால் போதுதி என்று போனார்'

என்ற வரிகளைப் படிக்கும்போது இராமனின் நினைவலைகள் நம் நெஞ்சில் எழும்புவதை உணரமுடியும்.

துயரம் தீர்த்த தூயவள்

உளம் வாடி, உணவு தேடி வந்த இராமனின் இதயக் கவலையைத் தன் எண்ணக் குறிப்பால் சபரி அறிகிறாள். தான் சுவைத்துப் பார்த்து எடுத்து வைத்த இன்சுவைக் கனிகளைத் தருகிறாள். கையறு நிலையில் வந்து நிற்கும் காகுத்தனுக்கும் அவன் தம்பிக்கும் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் ஆறுதல் மொழிகள் கூறுகிறாள். செவியுணவும் வாயுணவும் கிடைக்கப்பெற்ற இராமன் நெஞ்சம் நிறைகிறது. கவலை மறைகிறது. அதனால் இராமன்

"அருந்தவத்து அரசிதன்னை அன்புற நோக்கி எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய் அம்மனை வாழி" என்று கூறுகின்றான்.

தெய்வம் ஆனாள்

இராமனுக்கும் இலக்குவனுக்கும் சபரி சுக்கிரீவன் உறையும் இரலை மலைக்குச் செல்லும் வழியைக் கூறுகிறாள். தான் புவிக்கு வந்ததன் நோக்கம் நிறைவுற்ற சபரி இராமன் முன்னாலேயே

"தன் உடல் துறந்து தான் அத்தனிமையின் இனிது சார்ந்தாள்"

இக்காட்சியைக் கண்ட தசரதன் மைந்தர்கள் வியந்து நோக்குகின்றனர். நாமும் வியப்பு அடைகிறோம்.

சபரியை ஏன் படைத்தான் !

மேலோட்டமாகப் பார்த்தால் சபரி சிறிய பாத்திரம்தான். அவள் காட்டுவது இராமனிடம் குறைவற்ற அன்பு மட்டுமே. ஆய்ந்து அறிந்த கம்பன் பக்கங்களை நிரப்பவோ, பாடல் வரிகளைக் கூட்டவோ மட்டுமே சபரியைப் படைத்திருக்க மாட்டான். என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். தாய்மையின் சிறப்பை, பெண்மையின் பெருமையைக் கம்பன் சபரி மூலம் இந்தச் சமுதாயத்துக்கு உணர்த்த விரும்புகிறான். மன அடக்கமும், உடல் ஒடுக்கமும் ஆடவரின் தனியுடைமை அல்ல ! மகளிருக்கும் உண்டு. பந்த பாசங்களில் கட்டுண்டு கிடக்காமல் முயன்றால் பெண்களும் பரம்பொருளை கண்டுய்ய முடியும் என்பதை உலகுக்கு உணர்த்த விரும்பியே கம்பன் சபரியைப் படைத்தான் என்பது புரியும்.

'சபரி' தெய்வத்தாய் ! அவளது அன்பில் உருகி அருளில் கரைவோமாக.



தாரை

(முனைவர். கி.சேகர், M.A., M.Ed., Ph.d.,
முதல்வர், சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி, மன்னச்சநல்லூர்)

கிட்கிந்தைப் பேரரசன் வாலியின் மனைவி தாரை. வான்மீகத்தின் தாரைக்கும், கம்பன் தாரைக்கும் பல வேறுபாடுகள் உண்டு. வாலி இறந்த பின்னர் தாரை சுக்ரீவனுடன் வாழ்ந்தாள் என்பது வான்மீகரின் கதை. கம்பன் காட்டும் தாரை கற்பில் சிறந்தவள். தம்பியின் மனைவியைக் கவர்ந்ததற்காக வாலியை இராமன் கொன்றான். அண்ணன் மனைவி தாரை, கணவன் இறந்த பிறகு சுக்ரீவனுடன் வாழ்ந்தாள் என்பதை மாற்றி, அவளைப் புதிய வார்ப்பாகக் கம்பர் உருவாக்குகிறார். வான்மீகத்திலிருந்து மாறுபட்டுத் தாரையைக் கம்பன் படைக்கும் இப்பாங்கு அறிந்து இன்புறத்தக்கது. அப்பாத்திரப் படைப்பு பற்றி ஈண்டுக்காண்போம்.

குரங்கினத்தவள் ஆயினும் மிக்க அழகுடையவள் ஆகவும், பண்புகள் பெற்றவளாகவும், தாரையைக் கம்பர் படைக்கின்றார், இவளை, ‘மலைக்குல மஞ்ஞை’ என்றும் ‘அமிழ்திடைத் தோன்றிய வேயினாள்’ என்றும் கம்பர் கூறுவார். நன்மகனாகிய அங்கதனைப் பெற்றெடுத்த பெருமை கொண்டவள் தாரை. வாலியுடன் அரசியலில் பங்கேற்ற பெருமையும் உடையவள். சுக்ரீவன் போருக்கு அழைத்த காலத்து வாலி புறப்பட்டான். அப்போது கணவன் போருக்குச் செல்வதைத் தடுத்த தாரை, ஒற்றர்கள் தன்னிடம் கூறிய செய்தியை வாலிக்கு உரைத்தாள்.

சுக்ரீவனுக்கு நட்பாக இராமன் என்பவன் வாலியைக் கொல்ல வந்துள்ளான் என்பதை ஒற்றர் மூலம் அறிந்து தாரை வாலியிடம் கூறினாள். வாலிக்கு அறிவுரை கூறும் அளவிற்குத் தாரை, அறிவுத்திறனும், உரிமையும் பெற்றிருந்தாள். கணவன் மிது கொண்ட மிகுந்த அன்பினால், இராமனால் கணவனுக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சினாள். அன்றியும் எல்லையற்ற வலிமை படைத்த தன் கணவனையே, அழிக்கும் ஆற்றல் பெற்ற பரம் பொருள் இராமன் என்பதையும் தாரை உணர்ந்திருத்தல் கூடும். அவள் மொழிவழி வாலி நின்றிருப்பின் அழிவை எய்தியிரான். காக்க முனைந்த மனைவியின் சொல்கேளாது. அவளைக் கைம்பெண் ஆக்கினான் வாலி. இந்தக் குற்றவுணர்வினால் தான் இறப்பதற்கு முன் வாலி தாரையைக் காணாது கண்மூடினான்.

வாலி இறந்தபின் தாரை புலம்புகையில் கணவனைப் பொய் உரைபாப் புண்ணியன், பகையாத பண்பினன் என்று பலவாறு போற்றினாள். அங்கதனாகிய மகனைக் காத்தற் பொருட்டும், குரங்கினத்தாரை நிலை நிறுத்தற் பொருட்டும் கணவன் இறந்த பின்னும் உயிர் வாழ்ந்தாள் தாரை.

உரிய காலத்தில் படையோடு சென்று இராமனைக் காணாத சுக்ரீவனை நோக்கிச் சினத்துடன் வந்த இலக்குவனின் சீற்றம் தணித்தவள் தாரை, அவள் கொண்ட கைம்மைக் கோலம் கம்பரையே தொழவைத்தது. குரங்கினத்து மங்கையர் கூட்டத்திடையே தாரை நின்று இலக்குவனை நோக்கி, "ஈண்டு நீ வந்த காரணம் யாது"? என வினவினாள்.

'ஆர் கொலோ உரை செய்தார்?' என்று
அருள்வர, சீற்றம் அஃக
பார்குலாம் முழுவெண் திங்கள், பகல்
வந்த படிவம் போலும்
ஏர் குலாம் முகத்தினாளை, இறை
முகம் எடுத்து நோக்கி,
தார் குலாம் அலங்கல் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்

(கிட்கிந்தா காண்டம் கிட்கிந்தைப் படலம்)

தாரையைக் கண்ட இலக்குவன் கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய தன் தாயரை நினைவிற் கொண்டு வருந்தினான் எனக் கம்பர் மிகச் சிறந்த காட்சியைப் படைக்கிறார். அரசனின் மனைவியாக நீண்ட காலம் விளங்கி, அரசனையும், அப்பதவியையும் இழந்து, கண்டார் இரங்கத்தக்க நிலையில் தாரை விளங்கினாள். எனினும் அவள் கொண்ட தாய்மை உள்ளத்திற்கு மட்டும் யாதொரு குறையும் நேரவில்லை என்பதை இக்காட்சி உணர்த்துகிறது. எனவே தான் அவள் கைம்மைக் கோலத்தைக் கண்ட இலக்குவன் கண்ணீர் மல்க நின்றான். அவள் புறக்கோலம், இலக்குவனின் அகக் கருத்தை மாற்றியது

மங்கல அணியை நீக்கி, மணி
அணி துறந்து, வாசக்
கொங்கு அலர் கோதை மாற்றி
குங்குமம் சாந்தம் கொட்டாப்

பொங்கு வெம் முலைகள், பூகக்
கமுத்தோடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப நைந்தான்

(கிட்கிந்தா காண்டம். கிட்கிந்தைப்படலம்)

தாரையின் கோலத்தைக் கண்ட இலக்குவன் அவளுக்கு மறுமொழி கூறவும் மறந்து திகைத்து நின்றதாகக் கம்பர் கூறுவார், பின்னர், சுக்ரீவன் இராமனிடம் சொன்னபடி உதவி செய்ய வராததால் அது குறித்து அறிந்து சொல்ல வந்ததாக இலக்குவன் தாரையிடம் கூறினான்.

'சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய்; நீ அலால், மற்று
ஆர் உளர்', (கிட்கிந்தா காண்டம். கிட்கிந்தைப் படலம்)

என்று அறிவுத் திறம் நிரம்பிய தாரை இலக்குவனை அமைதிப் படுத்தினாள். "சுக்ரீவன் தான் சொன்ன சொல்லில் தளர்ந்து விடவில்லை, உலகெங்கும் தன் தூதர்களை அனுப்பி வானரச் சேனைகளைத் திரட்டி வருகிறான்". என்று சுக்கிரீவனின் நிலையை அவனுக்கு வர இருந்த பெருந்துயரைத் தடுக்கிறாள். இவ்வாறு வருமுன்னர் ஒன்றைக் குறித்து ஆராய்ந்து அதன் தீயவிளைவுகளை நெருங்க விடாமல் விழிப்புடன் செயலாற்றும் பெண்ணாகத் தாரை ஒளி விடுகிறாள். கம்பர் பொறை மிகுந்த பாத்திரங்களையும், பொங்கி எழும் பாத்திரங்களையும், பற்றற்று விலகி இருக்கும் பாத்திரங்களையும் படைப்பதில் வல்லவர், எனினும் அவை அனைத்தையும் கூட்டி அறிவுமிகுந்த செயல்திறம் கொண்ட தமிழ்ப்பண்பாட்டுப் பெட்டகமாகத் தாரையைப் படைத்துக் கம்பர் தன்னிகரற்று விளங்குகிறார்.



‘அழக்கண்டும் அறிந்திலாதான்’

(தானிய மாலை)

(டாக்டர். சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்)

பத்தாயிரம் கவிதை முத்தாகத் தந்த சத்தான கவிச்சக்கரவர்த்தி கம்பன். இராம காதை கம்பன் நமக்களித்த சுரங்கம். இலக்கியப்பேழை, கற்பனைக்கடல் இந்தக் காவியக் கடலைக் கடந்துவிட ஒருவரின் வாழ்நாள் போதாது என்பது இரசிகமணி டி.கே.சியின் கருத்து. அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

‘கம்பனது பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்கள்’ என்றார் கவியரசர் கண்ணதாசன். பெண் பாத்திரங்களைத் தனித்தன்மையுடன் படைத்துள்ள கம்பன் பெண்ணுரிமைக் காவலன் தான். அவனது இலட்சியநாட்டில் *‘பெருந்தடங்கண்பிறை நுதலார்க்கெல்லாம் பொருந்து கல்வியும் செல்வமும்’* நிறைந்திருந்தது. மாதர் கற்பின் நின்றன காலமாரி அவன் படைத்துள்ள பெரிய சிறிய பெண்பாத்திரங்கள் பல. சீதை, கோசலை, கைகேயி, சுமித்திரை, தாரை மண்டோதரி, தானியமாலை, கூனி, தாடகை, அகலிகை, சூர்ப்பனகை, நீல மாலை, சபரி, திரிசடை சுயம்பிரபை, இலங்கை மாதேவி என்று ஒவ்வொரு பெண்பாத்திரத்திலிருந்தும் நாம் ஒவ்வொரு அழகை இரசிக்கிறோம். ஒரு பண்பைப்போற்றுகிறோம்.

மதிப்பெண்

ஒரு பாத்திரம் எத்தனை காட்சிகளில் வருகிறது என்பதை வைத்து மதிப்பெண் போடுவது கவிஞனுக்குப் பொருந்தாது. காட்டாக, 80/100, 85/100 என்று மதிப்பெண் பெற்ற மாணவர்களைப் பள்ளியில் சேர்த்து 100% தேர்ச்சி காட்டுகின்றன சில பள்ளிகள் 40/100, 35/100 என்று மதிப்பெண் வாங்கிய மாணவர்களைச் சேர்த்து 70% தேர்ச்சி காட்டுவன சில பள்ளிகள். பின்னே சொன்ன வகைப்பள்ளிகளின் சீர்மை குறைவானதா ?

அதுபோலத்தான் பல காட்சிகளில் தோன்றிப் பண்பு நலன் காட்டுவன ஒருசில பாத்திரங்கள், சில காட்சிகளில் வந்து நம் நெஞ்சில் நிற்பன சில பாத்திரங்கள். ஒரே ஒரு காட்சியில் வந்தாலும் நெஞ்சத்திரையில் நினைவழியா ஓவியமாக நிற்பன சில பாத்திரங்கள். எவை உயர்வு எவை தாழ்வு என்று மதிப்பெண் போடலாமா? கூடாது !. கவிஞனுக்கு எல்லாப்பாத்திரங்களுமே

அவனுடைய பிள்ளைகள் தாம் இப்போது நான் காட்டவரும் தானியமாலை ஒரே ஒர காட்சியில் வரும் உத்தமி !.

யார் இவள் ?

"Mothers - Treated by Kamban" என்ற ஆய்வுக் கட்டுரையில் ரூத்ஜாய் என்பவர், **"Mandothari and Taanyamalai are Mothers of giants. Their Motherly affection is understood from their wailings and Lamentations at the time of the death of their sons".** என்று எழுதுகிறார் (மண்டோதரியும் தானியமாலையும் அரக்கத்தாயர். அவர்களின் தாய்மையை, தாய்ப்பாசத்தை அவர்களின் மகன்களின் மரணத்தின் போது அவர்கள் அழுது புலம்பிய பகுதிகளிலிருந்து அறிகிறோம்).

தானியமாலை, தானிய மாலி, தானிய மாலினி என்றெல்லாம் அழைக்கப்படும் இந்தப் பெண் இராவணனின் மனைவி, மண்டோதரி என்ற பட்டத்தரசிக்கு அடுத்த நிலையில் அரசி, இவளைக்குறித்த முன் அறிமுகம் எதுவும் கம்பனால் தரப்பெறவில்லை. மயன் மகள் மண்டோதரி, மயில் போன்றவள், கற்புடை மங்கை அவளது கற்பு ஒளியால் அவளைச்சீதை என்று அனுமன் ஐயுற்றான் என்றெல்லாம் மண்டோதரி உறங்கும் போதே வர்ணனை செய்த கம்பனுக்குத் தானியமாலையை அறிமுகப்படுத்தி நேரமில்லை போலும் ! போகட்டும்.

அவள் மிகுந்த இரக்க குணமுள்ளவள், என்றும் மகிழ்ச்சியாயிருந்தவள். யாரும் அழக்கண்டும் அறிந்திலாதவள். ஆனால் மண்டோதரியையும் தானிய மாலினியையும் அழும் போது நமக்குக் காட்டி நம்மை அழவைத்து விடுகிறானே ! சீதை சந்தன மரத்தைச் சுற்றிப் படர்ந்த முல்லை ! மண்டோதரி, தானிய மாலினி இவர்களோ கருவேல மரத்தைச் சுற்றிப் படர்ந்த முல்லைக் கொடிகள்.

பெண்கள் பல விதம்

கையளவு கிடைத்தாலும் களிப்புடன் ஏற்கும் கோசலை போன்ற பெண்களும், பிடிவாதத்தால், கணவன் உயிர் போனாலும் நான் கொண்டதைச் சாதிப்பேன் என்றிருக்கும் கைகேயி போன்ற பெண்களும், பிறருக்காகத் தியாகம் செய்ய முன் வரும் சுமித்திரை போன்ற பெண்களும் உலகில் உள்ளனர். கணவன் என்ன தவறு செய்தாலும் எதிர் பேசாத மண்டோதரி போன்றவர் உள்ளனர். "தப்புச் செய்தவரே! என்னைத் தீண்டாதீர் !" என்ற

திருநீல கண்டர் மனைவி போன்ற பெண்களையும் நாம் பார்க்கிறோம். மனைவி என்ற நிலையில் உணர்ச்சிக் கொப்பளிப்புக்களைக் கொட்டித் தீர்த்த பெண்களும் உள்ளனர். அமைதி காட்டி வாய்ப்பு வரும் பேது நறுக்கென்று குத்துபவரும் இருக்கின்றனர். எப்படியாயினும் தாய், தாய்பாசம் என்று வருகிறபோது, குரக்குப் பெண்ணோ அரக்கப் பெண்ணோ. தாய் தாய்தான் என்று பெருமிதம் கொள்ளும்படி பாத்திரங்களைப் படைத்து விட்டான் கம்பன் !.

ஒரே காட்சி, ஆம், ஒரே ஒரு காட்சியில் வரும் தானியமாலை இராவணனின் மானைவி ! மண்டோதரி இந்திர சித்தனைப் பெற்ற பெருமைக்குரியவள். இவள் அதிகாயனை ஈன்ற சிறப்புடையவள் இராவணனின் இந்த இருமனைவியரின் பெயர்களை மட்டும் தான் கம்பன் குறிப்பிட்டுச் சொல்கிறான். மற்ற அரக்க மனைவியராம் பெண்களைக் குறித்துச் சொல்லவேயில்லை.

இலக்குவன் உலகம் மூன்றும் கலக்குவன் என்றாற் போல, இலக்குவன் ஆற்றல் காட்டி நடத்திய போரில் தசகண்டனின் மகன் அதிகாயன் சொல்லப்பட்டான் தூதர் வந்து செய்தி சொல்ல, *"ஏங்கிய விம்மல், மானம், இரங்கிய இரக்கம், வீரம், ஓங்கிய வெகுளி, துன்பம்"* இவை ஒன்றோடொன்று அலைபோல் மோத கண்ணீர் அருவி சோர நின்றான். தசமுகன் ! அவனது துயரத்தின் எல்லை காணமுடியுமா ?

"திசையினை நோக்கும், நின்ற தேவரை நோக்கும், வந்த
வசையினை நோக்கும், கொற்றவாளினை நோக்கும்"
"மன்னினை எடுக்க என்னும் ; வானினை இடிக்க என்னும்
எண்ணிய உயிர்கள் எல்லாம் ஒருகணத்து எற்ற என்னும்
பெண் என்னும் பெயரை எல்லாம் பிளப்பன் என்றும் என்னும்"

என்ற வரிகளில் அவனது திகைப்பு. சோகம், கோபம், பெண் குலத்தின் மீது வந்த எரிச்சல் எல்லாம் புலப்படும்.

"கண்மணியைக் காட்டாயோ ?"

மலைக்குவட்டில் இடிவிழுந்தாற்போல, முலைக்குவட்டில் கையால் அடித்துக்கொண்டு வந்த தானிய மாலை இராவணன் காலடியில் வீழ்ந்தாள் உலையில் செம்பு உருகி வழிந்தாற் போல இரத்தக் கண்ணீர் வழிந்தது. "கொடியாய்" ! என்று தசமுகனாம் அருமைக்கணவனை ஏசத் தொடங்கிய தைரியசாலி தானியமாலையே !

"மாட்டாயோ, இக்காலம் வல்யோர்வலிதீர்க்க ?
மீட்டாயோ, வீரம் ? மெலிந்தாயோ தோளாற்றல் ?
கேட்டாய் உணர்ந்திலையோ ? என் உரையும் கேளாயோ
காட்டாயோ என்னுடைய கண்மணியைக் காட்டாயோ"

(அதிகாயன் வதை 268)

இந்திரற்கும் தோலாத நன்மகனை ஈன்றவள் என்ற பெருமிதம் கொண்டேனே ! மனிதனின் அம்புக்கு என்யிமகனைப் பலி உண்ணக் கொடுத்தேனே!

ஐயா! தம்பிகள், மக்கள் என்று அனைவரையும் முன்னே பலி கொடுத்துவிட்டுத் திக்கு விசயம் செய்ய இருக்கிறாயா ? பேதையாய்க் காமம் பிடித்து உழல்கின்றாயே ! சீதையால் இன்னும் கொஞ்சமா படப்போகிறாய்?

"அக்கன் உலந்தான்; அதிகாயன் தான்பட்டான்
மிக்க திறத்து உள்ளார்கள் எல்லாருமிவீடினார்
மக்கள் இனி நின்றுளான் மண்டோதரி மகனே !
திக்கு விசயம் இனி ஒருகால் செய்யாயோ ?" (அதிகாயன் - 270)

"ஏதையா சிந்தித்திருக்கின்றாய் ?"

வீரம் செறிந்த நன்மகனை இழந்ததாய் கணவனை ஏசவும் துணிவாள்தானே ! அதுவும் தன்காமத்திற்குத் தன் மகனைப் பலிதந்த தசமுகனை ஏசாமல் என்ன செய்வாள் ? மண்டோதரி புலம்பலில் சொஞ்சம் காரம் குறைவு தான் !

"அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்ற அமிழ்தால் செய்த
..சினால் இலங்கைவேந்தன் நாளை இத்தகையன் அன்றோ"

சீதை நஞ்சு போன்ற கற்பினாள் அமுதம் போன்ற அழகினாள் அமுதமான அழகைப்பருக நினைத்த தசகண்டன், கற்பெனும் நஞ்செ மறந்து விட்டான் ! இன்று என் மகனுக்கு நேர்ந்த மரணம் நாளை இலங்கை வேந்தனுக்கும் வருமே என்று அஞ்சினேன் என்று புலம்பிய மண்டடோதரியின் சொற்களில் காரம் குறைவு கணவன் மீது பரிவு அதிகம் ! ஆனால் தானிய மாலையோ பேதையாய்க் காமம் பிடித்து உழல்வாயோ ! சீதையால் வருவ இன்னும் சிலவேயோ ? என்று எரிவு அதிகமாகப் பேசுகிறாள் ! உம்பி, உணர்வுடையான், வீடணன் சொன்ன அறிவுரைகளையும் புறம் தள்ளினாய், குலக்கிழவன் மாலியவான் சொன்ன நல்லுரைகளைக் கேளாமல் வந்தாய் கும்பகர்ணனைக் கொல்வித்தாய் என்மகனையும் அம்புக்கு இரை ஆக்கினாயே

நன்றாக ஆண்டாய் போ ! என்ற கடுஞ்சொற்கள் ஒரு வீரனைப் பெற்ற வயிறு எரிந்து வரும் கோபக்கணைகள் வீரனை மானம் காக்க, நாடுகாக்க, உரிமை காக்கப் பலிதர வீரத்தாய் முன் வருவாள். தகப்பனாரின் காமத்திற்குப் பலிதர எந்தத்தாய் பொறுப்பாள் ! ஆகவே கன்று படப்பதைத்த தாய்ப்பசுபோல் தவித்தாள் தானியமாலை ! இந்திர சித்தனும் தந்தையிடம் சினந்து "அவர்கள் கொன்றார்கள் என்று சொல்லாதீர் தந்தையே ! கொலை சூழ்க என்று நீரே பலி கொடுத்தீர்" என்று பேசினான்.

சீதை மீது இராவணன் கொண்ட காமம் மாறி அவள் மீதும் பெண்ணினத்தின் மீறும் கோபம் வர, அதிகாயன் வதையும், தானியமாலையின் புலம்பலும் முதற்காரணங்கள் ஆயின ! ஆகவே, இடித்துரைக்கும் துணிவுடைய வீர மனைவியாகத் தானியமாலையைக் காண்கிறோம். மண்டோதரியாவது கணவன் தசமுகன் உடல் தழுவி, அவனுடன் தன்னுயிரைப் போக்கிக் கொண்டாள். தானியமாலை என்ன ஆனாள் ? யார் அறிவார்? அறிமுகமும் முடிவும் தெரியாமல் இடையிலே காட்டி மறைத்து விட்டானே கம்பன் !.

திரிசடை

(புலவர். சு.சங்கர நாராயணன் M.A., M.Phil., M.Ed.,
மணமேல்குடி)

முன்னுரை

கற்றோர் மனம் களிப்பிக்கும் கம்பனில் கவின்மிகு துணைப் பாத்திரங்களாக, ஒளியும் உருவுங் கொண்டு அநேகர் உலா வருகின்றனர். அவர்களுள் திரிசடை என்பாள் தகவும் திறனும் வாய்க்கப் பெற்ற அற்புதப் படைப்பாகக் காட்சி தருகின்றாள். அவளது அறிமுகம், அரும்பணி, ஆற்றல் விளங்கும் இடங்கள், இன்றியமையாமை, சீர்த்தி என்றவாறு வகைப்படுத்தி ஈண்டு அறிகுவோம்.

அறிமுகம்

சுந்தர காண்டம் அகமும் புறமும் அழகு விளங்கித் தோன்றும் பகுதி எனலாம். அசோக வனத்துள் சிறையிருந்த அறச்செல்வி சீதாப்பிராட்டியின் பண்புநலன்களும், சிறிய திருவடி அனுமனின் வீரதீர அழகும் பயின்றுஞ்விளங்குதல் இக்காண்டத்தின் தனி அழகாகும். இதன் மூன்றாம் படலமான காட்சிப் படலத்துள்,

"இருந்தனள் திரிசடை என்னும் இன்சொலின்
திருந்தினாள் ஒழியமற்று இருந்த தீவினை
அருந்திறல் அரக்கியர் அல்லும் நள்உறப்
பொருந்தலும் துயில்நறைக் களிபொ ருந்தினார்"

(358. சுந்தரகாண்டம்)

என்றவாறு திரிசடை அறிமுகம் ஆகின்றாள்.

விளக்கம்

அனுமன் கடல்தாவிச் சென்று இலங்கையை அடைந்தான்; சீதையைத் தேடி பல இடங்களிலும் அலைந்தான்; இறுதியாக மாடுநின்ற மணிமலர்ச் சோலையாகிய அசோக வனத்தை அடைந்தான். அப்போது அரக்கியர் நடுவில், அனங்கவேள் ஓவியம் புகையுண்டதே போல் சீதாப்பிராட்டி திகழ்வதைக் காண நேர்ந்தது. அவள் சீதாப்பிராட்டிதானா என்று தெளியாத நிலையில், மரத்தில் மறைந்திருந்து அடுத்து நிகழ்வனவற்றைக் கூர்ந்து நோக்கத்

தலைப்பட்டான். இதற்குச் சற்று முன்னர், சீதாதேவி பற்பல பழைய கொல்லும் நினைவுகளை அசைபோட்ட வண்ணம் வாடிப் புலம்புகின்றாள். அவளது புலம்பல் எல்லை கடந்து செல்லும் நிலையில், நள்ளிரவில், சூழ்ந்து காவல்புரியும் அரக்கியருள் திரிசடையைத்தவிர ஏனையோர் தூக்கம் என்னும் மதுவைப்பருகி மயக்கம் அடைந்தனர். இன்சொல் வல்ல திரிசடை என்னும் நல்லாள் சிறந்த தோழமை உணர்வோடு சீதைக்கு இங்கிதமான செய்திகளைக்கூறி, உறங்காமல் உறுதுணை புரிபவளாக இங்கே அறிமுகம் ஆகிறாள்.

அரும்பணி

அசோக வனத்துள் சீதா தேவியைக் காவல் புரியவும், இராவணனது விருப்பத்திற்கு இணங்கச் செய்யவுமான பணிகளில் அரக்கியர் பலர் நியமிக்கப்பட்டனர். அவர்களின் பெயர்களாக ஏகஜடை, ஹரிஜடை, விகடை, துர்முகி, ப்ரகசை, அஜாமுகி, திரிஜடை என்பன வால்மீகி இராமயணத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் திரிஜடை என்பவளே கம்பரால் திரிசடை எனக் கூறப்படுகிறாள். அவளது பணி தனிச்சிறப்பு வாய்ந்த காவல்பணியாக அமைந்துள்ளது. 'அன்பினால் தாயினும் நல்லாள்' எனக்கம்பரும் 'என் துணை (தோழி) ஆம்' எனச் சீதையும், திரிசடையின் அரும்பணியைத் தாயன்பும், தோழமையும் உள்ளதாகக் கூறுகின்றனர்.

ஆற்றல் விளங்கும் இடங்கள்

சீதாப் பிராட்டியின் அருந்துணையாக திரிசடை ஆறுதலும் தேறுதலும் அளித்து இனிய நயவுரைகளை வழங்கிய வண்ணம் இருந்தாள். இவ்வுரைகளின் வாயிலாகத் திரிசடையின் கூர்த்த மதியும், அளப்பரிய மன ஆற்றலும் தெற்றென விளங்கும். அத்தகைய செய்திகள் சுந்தர காண்டம் 3ஆம் படலம் ஆகிய காட்சிப் படலத்திலும், 4ஆம் படலம் ஆகிய நிந்தனைப் படலத்திலும், யுத்த காண்டம் 16 ஆம் படலமாகிய மாயாசனகப் படலத்திலும், 23ஆம் படலமாகிய சிதை களம்காண் படலத்திலும் விதந்து கூறப்படுகின்றன. மேலும் யுத்தகாண்டம் 37ஆம் படலமாகிய மீட்சிப் படலத்துள், அனுமன் தன் கூற்றில் திரிசடையைப் போற்றியுள்ளதும் உன்னற்பாலது, இனி இச்செய்திகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

சிறிய திருவடியாகிய அனுமனுக்கு எம்பிராட்டி சீதாதேவியின் திவ்ய தரிசனக் காட்சி கிடைக்க அடிகோலும் இப்படலம் அற்புதமானது. இப்படலத்துள் சீதாதேவிக்கும் திரிசடைக்கும் இடையில் நிகழும் உரையாடல் வருமாறு.

சீதாதேவி

தோழியே கேள் ! என் புருவம், கண், நெற்றி, தோள் ஆகியன இடப்புறம் துடிக்கின்றன. இராமபிரான் முதன் முதல் மிதிலை நகருக்கு விசுவாமித்திர முனிவருடன் வந்தபோதும் இதேபோல் நிகழ்ந்தது. ஆனால் நாங்கள் நாட்டைத் துறந்து காடு வரப்புறப்பட்ட போதும், பின்னர் தண்டகாரணியத்தில் இராவணன் என்னைச் சிறையெடுக்க வந்தபோதும் இவ்வாறின்றி என்புருவம், கண், தோள் முதலியன வலம் துடித்தன. எனவே இப்போது இடம் துடித்ததால் என்ன நிகழுமோ யானறியேன். இதன் பயனை நீ எண்ணிக் கூறுவாயாக !

திரிசடை

தேவியே ! உனக்கு இப்போது ஏற்பட்ட இம்மங்கலக்குறி சுபசோபனம் ஆகும். உன்னைப்பிரிந்த இராமபிரானை நீ விரைவில் அடைவாய் ! அது மட்டுமா ! பொன்னிற வண்டு ஒன்று உன் ஏசவியோரம் இனியரீங்காரமிட்டுச் சென்றதே ! அதன் நிமித்தம் அதிவிரைவில் இராமதூதன் உன்னிடம் வந்து நற்செய்தி உரைப்பன் மயங்கற்க ! இன்னும் கேள் ! நீ துயிலாமல் இருப்பதால் கனவு காணும் வாய்ப்பு உனக்கு ஏற்படவில்லை. ஆனால் நான் கனவு ஒன்று கண்டேன். அதனைக் கூறுகிறேன் கேள் ! என் கனவில் இராவணன் தன் பத்துத் தலைகளிலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு கழுதைகளும் பேய்களும் பூட்டிய தேரில் ஏறி செவ்வாடை அணிந்து தென்திசை நோக்கிச் சென்றான். அவனது பிள்ளைகளும் உறவினரும் ஏனைய அரக்கர்களும் தென்திசை நோக்கியே தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் யாரும் திரும்பவில்லை. இராவணனது ஓமகுண்டம் அணைந்து செங்கறையான் புற்றாக மாறியது. அவனது அரண்மனையில் விடியில் இடிவிழுந்தது. அரண்மனை சிதைந்து எங்கும் இருள்கவ்வியது. பெண் யானைகள் மதநீர் பெருக்கின. முரசங்கள் கொட்டுவார் இன்றி அதிர்ந்தன. மேகம் இல்லாமல் இடி இடித்தது. விண்மீன்கள் உதிர்ந்து வீழ்ந்தன. இரவில் சூரியன் பாதியாகப் பிளவுபட்டுத் தோன்றினான். அரக்க வீரர்களின் கற்பக மலர் மாலைகள் புலால் நாறின. இலங்கை நகரமே எரியுண்டது. கோபுர கலசங்கள் வீழ்ந்து நொறுங்கின.

யானைகளின் தந்தங்கள் ஒடிந்தன. பூரண கும்பப்புனிதநீர் கள்ளாகிப் பொங்கியது. வானில் சந்திரனைப் பிளந்து கொண்டு விண்மீன்கள் வெளிப்பட்டன. எங்கும் குருதிமழை பொழிந்தது. போர்க்கருவிகள் ஒலித்தன. அரக்கியரின் தாலிகள் தாமே அறுந்து அவர்களின் கொங்கைகளில் வீழ்ந்தன. இராவணனின் பட்ட மகிஷி மயன் மகள் மண்டோதரியின் கூந்தல், பின்னல் அவிழ்ந்து பிரிந்து விழுந்தது; அருகே இருந்த பெரிய விளக்கின் தீ அதில் பற்றிக்கொள்ள சுறுசுறு என்று எரிந்தது. இவையெல்லாம் அரக்கர் அழிவுக்கான நிமித்தங்களே

சற்றுமுன் இன்னொரு விநோதக்கனவு கண்டேன். அதனையும் கேள் ! ஒன்றுக்கொன்று துணையான இரண்டு ஆண் சிங்கங்கள் ஓர்மலையிலே வாழும் பெரும்புலிக்கூட்டத்தைத் தமக்குத் துணையாகக் கொண்டு, மதயானைகள் வாழும் காட்டை அடைந்து அவற்றை அழித்து வெற்றிகொண்டன. பின்னர் அக்காட்டில் இருந்த ஒரு மயில், சிங்கங்களோடு சேர்ந்து அவற்றின் நகருக்குச் சென்றது. ஆயிரம் திருவிளக்குகளின் ஒளி ஒன்றாகப் பொருந்தும்படி ஒரு பெரிய விளக்கை ஏந்தித்திருமகள் இராவணனின் அரண்மனையிலிருந்து வீடணன் அரண்மனையை அடைந்தாள். இக்கனவின் நிமித்தமாக இராம இலக்குவர் வெற்றியும், வீடணன் பட்டாபிஷேகமும் ஐயமற விளங்கக் காணலாம். இன்னும் கனவு நிறைவடையவில்லை. இத்தருணத்தில் நீ எழுப்பிவிட்டாய் !

சீதாதேவி

தோழி ! நன்று கூறினாய் ! தொழ்ந்து துயில்வாயாக ! எஞ்சிய கனவைக் கனவைக் காண்பாயாக !

நிந்தனைப் படலம்

இராவணனது நெருக்குதலால் காவல் இருந்த அரக்கியர் பலரும் சீதாதேவியைப் பலவாறு தூற்றி அச்சுறுத்தினர். செய்வதறியாது திகைத்த தேவி கண்ணீர்விட்டு அழுது அவலச்சிரிப்பு சிரித்தாள். அப்போது திரிசடை, தேவியைத் தேற்றி, தேவி ஏற்கனவே நான் கனவின் நிமித்தங்களை உன்னிடம் கூறினேன். நீ வீணாக ஏன் கவலைப்படுகிறாய் விரைவில் நலம் காண்பாய். வருந்தற்க என்று இங்கித உரை கூறிநின்றாள். மேலும் தேவியை அச்சுறுத்திய ஏனைய அரக்கியரையும் நோக்கிக் கனவின் நிமித்தங்களைக் கூறி அவர்களை எச்சரித்து நல்வழிப்படுத்தினாள்.

மாயாசனகப் படலம்

இராவணன் ஆணைவழி மகோதரன் சூழ்ச்சியால் உருவெடுத்துவந்த மாயாசனகனை சீதைமுன் காட்டி அவனைத்தன் இச்சைக்கு இணங்கச் செய்ய இராவணன் அடாதசெயல்களைச் செய்ய முற்றபட்டான். அப்போது சோகத்தின் உச்சிக்குச் சென்றாள். தேவி இதனை உய்த்துணர்ந்து திரிசடை வந்தவன் சனகன் அல்ல அவன் மாயைவல்ல மருத்தன் என்னும் அரக்கனே நீ வீணேவருந்தாதே என்று தேற்றினாள்.

சீதை களம் காண் படலம்

இந்திரசித்தனின் பிரம்மாத்திரத்தால் மயங்கிக் கிடக்கும் ஆலக்குவனைப் பார்த்து இராமபிரானும் ஆற்றாமையோடு யுத்தகளத்தில் மயங்கி வீழ்ந்தார். அவர்கள் இறந்துவிட்டதாக அரக்கர் கருதினர். எனவே இராவணன் கட்டளைப்படி, சீதையைக் களத்திற்கு அழைத்துவந்து இக்காட்சியைக் காட்டினர். சீதா தேவி இராமனின் நிலைகண்டு வருந்திப் புலம்பிநின்ற நிலையில் திரிசடை அவனைத் தேற்றி இராம இலக்குவர்க்கு இறப்பு நிகழவில்லை. மயக்கமே அடைந்துளர். அவர்களது முகக் குறிகளைக் காண்க அறத்திற்கு அழிவு இல்லை. இறுதியில் அறமே வெல்லும் என்று தெருட்டுகின்றாள்.

மீட்சிப்படலம்

இராவண சம்ஹாரத்திற்குப் பின்னர் சீதையை அழைத்துவர வீடணன் தலைமையில் அனுமன் உள்ளிட்டோர் அசோகவனம் செல்கின்றனர். அப்போது சீதையைச் சித்திரவதை செய்து அச்சுறுத்திய அரக்கியரை அழிக்க வானரர் விரும்புகின்றனர். அப்போது அனுமன் கூற்றாக அமைவது குற்றமற்ற நலத்தினள் ஆகிய திரிசடையைத் தவிர்த்து ஏனையோரை எரித்து அழித்தவே நான் விரும்புகிறேன். என்பதாகும். பின்னர் அரக்கியர் அனைவரும் சீதையிடம் தஞ்சம் புகுந்தனர். தேவியின் அருளால் அவர்கள் மன்னித்து அருளப்பெற்றனர்.

இன்றியமையாமை

கொடுந்துயருள் அழுந்திய சீதை ஒருகால் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளலே தக்கது என எண்ணி குருக்கத்தி மரத்தை அடைந்தபோது, இன்னும் தாமதிக்கக் கூடாது என்று கருதிய இராமதூதன் அனுமன், அவள் முன் இராம நாமத்துடன் தோன்றினான் என அறிவோம். இஃது ஒரு முறை

மட்டுமே நிகழ்ந்து நிகழ்ச்சி ஆனால் வல்லரக்கியர் சூழலில் உள்ளம் உடைந்து, ஒவ்வொரு கணமும் வாழ்வோடும் சாவோடும் போராடும் உளத்தளாய் சீதாதேவி அலமரல் உற்றபோ தெல்லாம் தக்கதுணையாய் இருந்து, தனது கூர்த்த மதியால் வரும்பொருள் உரைத்தும் வல்லமை சேர்த்தும் தொண்டாற்றியவள் திரிசடையே ஆகும். அவளது சூழலே எம்பெருமாட்டி உயிர்வளப்பம் தொடர உறுதுணைஆனது. எனவே இப்பாத்திரப்படைப்பு தலைவிக்கு உரம் விளைக்கும் இன்றியமையாமை மிக்கதே எனத் தெளியலாகும்.

சீர்த்தி

இதுகாறும் கூறப்பெற்ற திரிசடையின் பண்பு நலன்களுடன் மேலும் எண்ணத்தக்க ஏற்றங்கள் சில ஈண்டு காண்குவம். திரிசடை என்னும் பெயர் சுருண்ட அழகிய கூந்தலை உடையவள் என்றபொருள் உடையது எனவும், அவள் வீடணனின் பதினான்கு வயதுப் புதல்வியாம் அழகி எனவும் உரையாளர்களிடம் ஓர் கருத்து உண்டு. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். அ. விநாயமூர்த்தி அவர்கள் எனது லிலி பாடவகுப்பில் இச்செய்தியினைக் கூறக் கேட்டுள்ளேன். ஆனால் கம்பனில் இதற்கு அகச்சான்று காணப்பட்டிலது மேலும்,

"அறிந்தார் அன்ன முச்சடை என்பாள் அதுசொல்ல" எனும் நிந்தனைப்படலம் 487 ஆம் பாடல் அடியில் திரிசடையை முச்சடை என்பாள் எனக் கம்பர் கூறுகிறார். இஃது ஆய்வுக்குரியது. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் இயற்றிய இராமாயணம் எனும் நூலின் பத்தாம் அத்தியாயம் அத்யாத்ம இராமாயணம் எனும் பகுதியில், இராமகாதை அனைவரது வாழ்விலும் அன்றாடம் நிகழ்வதே எனவும், சீவான்மா பரமான்மாவிடம் இலயம் அடைவதே இதன் உள்ளுறை எனவும் விளக்குகிறார். சிவான்மாவின் பிரதிபிம்பமாக சீதையும், பரமான்மாவின் பிரதிபிம்பமாக ஸ்ரீ இராமனும், வழிப்படுத்தும் குருவின் பிரதி பிம்பமாக அனுமனும் அமைவதாகவும் இன்னும் பலவாறும் விளக்கிச் செல்கிறார். அந்நெறியே நிறுத்தி நோக்கினால், சீவான்மா ஆகிய சீதையின் அகவிழிப்புக்கு உதவும் அருள்ஞான சித்தியாக திரிசடையை எண்ண முடிகிறது.

இன்னொருவகையில் வைணவப் பெருநெறி உணர்த்தும் பகவத் சேஷத்தும், பாகவத சேஷத்துவம் என்ற நிலைகளில் நிறுத்திப் பார்கையில், எம்பிராட்டியாகிய பகவத் சேஷத்துவத்தினும், அவளுக்கு அடிமை பூண்டு

விளங்கும் பரம பாகவத பூஷணையாகிய திரிசடையின் பாகவத சேஷத்துவம் (அடியவர்திறன்) ஒரு படி மாற்று உயர்ந்தே காணப்படுவதை அறியலாம்

திருக்ண்டேன் பொன்மேனி கண்டேன் என்ற பேயாரின் பாசுக் காட்சியில், எம் பெருமாட்டியின் காட்சி லயத்தோடேயே எம் பெருமானின் சேர்க்கையும் ஆகிய பரமானந்தம் நிரம்பி வழிவதைப் போல, அரக்கியர் நடுவண் எம் பிராட்டியாகிய திருக்கண்டவர்களுள் முதன்மைச் சிறப்பு வாய்ந்வள் திரிசடையே அல்லவா

நிறைவுரை

திரிசடை பாத்திரப்படைப்பை பல நிலைகளில் வைத்து நோக்கினோம். அஃது இன்றியமையாச் சிறப்புடையது எனவும் தெளிந்தோம். புறத்துறைகளுள் நன்னிமித்தம் கண்டு உரைக்கும் விரிச்சி எனும் துறையினோடும் இஃது ஒப்பாய்வு செய்யப்பெறும் பெற்றியது.

வாழ்க கம்பன் ! வாழிய திரிசடை நல்லாள்!

அகலிகை

ஏ.பி.மகாபாரதி எம்.காம்.,
மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை

பெண்ணழகுத் தெய்வம் அழியாப்பேரழகி அகலிகை. வால்மீகியார் அவளைப் புழுதியில் புரளவிட்டார். அவளும் இசைந்தே இந்திரனிடம் தன்னை இழப்பதாகக் காண்பிக்கப்படுகிறாள். கல்லாகச் சபிக்கப்படுகிறாள். கம்பர் கவிவண்ணத்தில் வனப்பும் அழகும் நிறைந்த அகலிகை போற்றப்படும் பாத்திரமாக, வணங்கப்படும் பாத்திரமாக மாற்றப்படுகிறாள்.

தமிழர் திருமணத்தில் அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் சடங்கு இன்று வரை இடம் பெறுகிறது. கற்பு நெறி தவறும் போது அகலிகை பட்ட துன்பம் பெற நேரிடும் அதே வேளையில் கற்பு நெறியில் செல்லும் போது வானத்தில் ஒளி வீசும் அருந்ததி போன்று போற்றப்படுவாய் என வாழ்வியல் நெறி கூறும் பாத்திரமே அகலிகை பாத்திரமாகும். பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு வேண்டும் என்ற அறத்தைக் கூறும் நிகழ்ச்சியாகவும் இது காட்டப்படுகிறது.

கம்பர் அகலிகையின் பெண்மைக்குக் களங்கம் ஏற்படாவண்ணம் மிக நேர்த்தியாகப் படைக்கிறார்.

"பொய் இலா உள்ளத்தான் தான்
உருவமே கொண்டு புக்கான்"

இந்திரன் அகலிகையின் கணவன் கௌதமனின் உருக்கொண்டே அவன் ஆசிரமம் புகுந்ததாகக் கூறுகிறார். மெதுவாக அகலிகையும் அத்தவறுக்கு உடன்பட்டுவிட்டாள் என்பதைப் பக்குவமாகக் கூறுகிறார்.

"உணர்ந்தபின்னும் தக்கது அன்று என்ன ஓராள்
தாழ்ந்தனள் இருப்பத்தாழா"

இத்தீச்செயல் தனக்குத் தகுதியானதன்று என்று அறிந்து அதனை விலக்காமல் அச்செயலில் தான் மனம் கவிழ்ந்து விட்டதாகவே கூறுகிறார்.

கௌதம முனிவனும் இச்செயல் கண்டு,

"விலை மகளனைய நீயும்
கல்லியலாதி யென்றான் "

என்று கல்லாகச் சபிக்கின்றான். பெண்மைக்குக் களங்கம் ஏற்படுகிறது. பலகாலம் கல்லாகவே கிடக்கின்றாள். துன்பமே உருவாக தன் உருமாறிக் கிடக்கின்றாள். பின்னர் இராமன் அவ்வழியாக விசுவாமித்திரனுடன் வருகின்றார். அகலிகை கதையைத் தெரிந்து கொள்கிறார்.

இராமபிரான் அவதாரப்புருஷன். மனித உருவெடுத்த மாதவன் அவனதுஞீகால் வண்ணத்தால் அகலிகை தன் முன் உருவத்தைப் பெற்றுவிட்டார். அவன் கருணையால் அவளது களங்கம் நீங்க வேண்டும்.

"நீ அன்னை என்று
பொன் அடி வணங்கிப் போனான்"

இராமபிரான் அகலிகையை அன்னை என்று கூறி வணங்குகிறார். களங்கம் மெதுவாக விலகுகிறது.

பின்னர் இராமன், இலக்குவன் மற்றும் விசுவாமித்திரன் மூவரும் அகலிகையின் கணவன் கௌதமனிடம் சென்று அகலிகையை ஏற்றுக் கொள்ளச் செய்கின்றனர்.

"நெஞ்சினால் பிழை இலாளை
நீ அழைத்திடுக "

என்று விசுவாமித்திரன் கௌசிகனிடம் கூறுகிறார். மனதிலே எண்ணாமல் ஏற்பட்ட பிழை என்று கூறி களங்கம் துடைக்கப்படுகிறது.

பின்னர் இராமபிரான் கௌதமனின் கமலத்தாள்கள் வணங்கி குற்றமற்ற கற்பினால் மிக்க அத்தெய்வப் பெண் போன்றவளை

"மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன் கைய்ந்து "

கௌதமனிடம் ஒப்புவித்து செல்கின்றார். அகலிகை எனும் அணங்கு கற்புமிக்கவளாக்கப்படுகிறாள்.

பொன்னில் ஏற்பட்ட மாசு நீக்க புடம் போடுவது போன்று அகலிகை தன் களங்கம் நீங்கக் கல்லாகி பின் பழைய உருப்பெற்று இராமபிரானே 'அன்னையே' என்று போற்றும் உயர்ந்த பாத்திரமாகப் படைக்கப் பெற்றுள்ளாள்.

பிரஜாபிதா பிரம்மா குமாரிகள்
ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்

Y.S.T.L. இல்லம், 3186, கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை.

☎ 423335

இவ்வமைப்பின் சிறப்பு அம்சங்கள்

- **UNICEFல்** நிரந்தர அங்கம் வகிக்கிறது.
- **UN** ல் பொருளாதாரம் சமூகத்துறையின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கிறது.
- **UN-DPI** ல் அரசியல் சார்பற்ற அங்கமாக உள்ளது.
- மொரீசியஸ் அரசாங்கம் இதனை பல்கலைக் கழகமாக அங்கீகாரம் செய்துள்ளது.
- கயானா நாட்டு பாராளுமன்றம் 3 நிமிட இராஜயோகம் செய்த பிறகே துவங்குகிறது.
- மைசூர் யுனிவர்சிட்டி **Ph.D.,** பட்டத்துக்காக இதனை பாடமாக வைத்துள்ளனர். மேலும் கல்வித் துறையில் ஆன்மீகம், நற்பண்புகளை வளர்க்க இந்த அமைப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இதன் தலைமை நிர்வாகிக்கு ஐ.நா.சபை 1986ல் அமைதியின் தூதுவர் என்ற பட்டத்தை கொடுத்துள்ளது.
- 7.3.1994 இந்திய அரசாங்கம் 1 ரூபாய் ஸ்டாம்பு வெளியிட்டுள்ளது.
- 28.10.2001ல் பாரத பிரதமர் இந்த தியானத்தை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆனை பிறப்பித்துள்ளார்.
- உலகெங்கும் 85 நாடுகளில் 6000 கிளை நிலையங்கள் வாயிலாக உலக அமைதிக்கு அரும்பணி ஆற்றி வருகிறது.

தலைமையகம் : பாண்டவபவன், அபுமலை, இராஜஸ்தான்,

கிளைகள் :

சென்னை **Q96,** 3வது அவின்யூ, அண்ணாநகர். **& 6266765**
மதுரை 36, மீனாட்சி நகர், (P&T நகர்) **& 640715**
ஆலங்குடி 9, கச்சேரிரோடு, ஆலங்குடி. **& 451551 pp**
கறம்பக்குடி குழந்தைவேல் செட்டியார் இல்லம். வாணியத்தெரு

ஒன்றுபடுவோம் மீண்டும் பொன்னுலகை கொண்டு வருவோம்

மனம் ஒருமுகப்படுத்தல்

- ஓர் அற்புதம்

(செய்முறை தியானம்)


செய்முறை

உங்கள் மனதோடு மிகவும் அன்போடு பேசுங்கள்
வீண் எண்ணங்களை விலக்கிட அதற்கு ஆலோசனை கூறுங்கள்
கடந்த கால நினைவுகளிலிருந்து விலகிடவும்,
வருங்காலத்தைப்பற்றிய கவலைகளிலிருந்து விடுதலை பெறவும்,
உங்கள் உணர்வுகளை கடவுளிடம் கொண்டு செல்லுங்கள்.
உங்கள் மனதை கடவுளிடம் திறந்து காட்டுங்கள்
கடவுள் உங்களைப் பார்ப்பது போல, நீங்கள் உங்களைப் பாருங்கள்
கடவுள் மற்றவரைப் பார்ப்பது போல, நீங்களும் மற்றவரைப் பாருங்கள்
கடவுள் வாழ்க்கை நாடகத்தைப் பார்ப்பதைப் போல, நீங்களும் பாருங்கள்
கடவுளின் உணர்வுகளுக்கு உங்கள் இதயத்தில் இடம் அளியுங்கள்
கடவுளின் அன்பான இதயத்தில், நீங்கள் மூழ்கியிருங்கள்

பிரம்மா குமாரிகள்
ஈஸ்வரிய விஸ்வ வித்யாலயம்
ஒய் எஸ்டியிஎல்.இல்லம்,
3186, கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை
622 001
☎ 423335

பிரம்மா குமாரிகள்
Q- 93 வது அவின்யு,
அண்ணாநகர், சென்னை - 40
☎ 6266765, 6267441
www.bkwsu.com

உள்ளடக்கம்



புதுக்கோட்டை நகர முக்கிய தொலை பேசி எண்கள்

அவசர உதவி

தீ அணைப்பு	101,422399,422406
காவல் கட்டுப்பாட்டு அறை	100
தலைமை மருத்துவமனை	422382
இராணியார் மருத்துவமனை	422383
ஆம்புலன்ஸ் (பத்மா கிளீனிக்)	420139,421475
மாவட்ட ஆட்சித்தலைவர்	421690,421663
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்	421624,421626
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்	466673
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்	466674

கம்பன் கழகம்

சித்ரா ஜவுளிஸ்டோர்	421650
ம. கந்தையா	421134
இரே.இராமையா	466842
வீர. காசி விசுவநாதன்	422211,471211
சி. ராமச்சந்திரன்	442245
கோ.வே. சுப்பிரமணியன்	465564
புலவர் பெ.ஆறுமுகம்	429296
சி.கோவிந்தராஜன்	470597
எஸ்.ஆர். ஜானகிராமன்	422762.421747,422283
ரா.சம்பத்குமார்	427211.431211,442245
கறு.ராமசாமி	426231,428613

மாவட்ட வர்த்தக கழகம்

வர்த்தக கழக அலுவலகம்	422777
R.சேவியர்	444500, 471122, 471133
N.ஷாகுல் ஹமீது	420131,422311
பரமேஸ்வரன்	426521

திருவருள் பேரவை

R.Kமூர்த்தி	421499
ரா.சம்பத்குமார்	427211, 431211, 442245
A.Rநூர்முகமது	465771
M.சபியுத்தீன்	422138
M.N.A.M. சபியுல்லா	421528
சம்மனசு அடிகளார்	421662
Rசேவியர்	444500, 471122, 471133

ரோட்டரி

RA. குமாரசாமி	427767
M. சொக்கலிங்கம்	421737
N.விஜயகுமார்	420406
MSM.முத்துராமன்	422405
G.அந்தோணி	423238,421485
A.அண்ணாமலை	425070
R.கிருஷ்ணமூர்த்தி	429279
R.ஜிவானந்தம்	465183
Dr.மதுராந்தகி	465537
AL.வள்ளியப்பன்	431115
V.ராஜேந்திரன்	420015
Dr S.ராமமூர்த்தி	423944
M.முத்துராமலிங்கம்	451888
N.விஜயன்	461748

இலக்கியப் பேச்சாளர்கள்

தா.மணி	461844
இரா.சந்திரசேகரன்	422044
ரா.சம்பத்குமார்	431211, 427211, 442245
பூங்கோதை	460090
அரங்கநெடுமாறன்	422881
பழ.துரைராஜ்	422933
சுவாதி	423616
கு.ப.கண்ணன்	460346
மு.பாலசுப்ரமணியன்	466191
முத்துநிலவன்	423423
தங்கம்மூர்த்தி	426025.424027
சி.கோவிந்தராஜன்	470597
D.ராஜகோபால்	422047
ச.தோ.தமிழ்மாறன்	465477
ச. பாரதி	422044
சே.ராதா	471999
சு.கலைச்செல்வி	465489
மு.பழனியப்பன்	465080
வி.கே.கஸ்தூரிநாதன்	91433-373309

முக்கிய பிரமுகர்கள்

ராணி ரமாதேவி	422238
சிவசுப்பிரமணியன் செட்டியார்	421801,422061
R.M.S. காடுவெட்டியார்	422363
ஆசிரியர் சிவாஜி	420260
S.V.S.வெங்கடாசலம்	424776,420556,
ஓவியர் ராஜா	421538,420136
AVM நல்லையா	470791, 470973
ARநூர்முகமது	465771
பேக்கரி சின்னப்பா	421809, 465687
KT.ராஜகோபால்	422873
Kராமையா (PCC Bank)	461959
SAசபியுல்லா	460568, 460603, 461836
மேனா கலிபுல்லா	421917
மு.முத்துசீனிவாசன்	471100
வே.குணசீலன்	461839

நடராஜன் (PCC Bank)	420960

தி.மு.க.

அலுவலகம்	421929
S. ரகுபதி	422221,422414
பெரி.அரசு	424929, 423522, 460296
சி.முத்துச்சாமி	424671,423354,424229
அஞ்சுகா மீனாட்சி சுந்தரம்	420290
க.சிதம்பரம்	422314,422340
ஜாபர் அலி	422279, 466484
மலையப்பன்	420214
ஆலவயல் சுப்பையா Ex.MLA	422330
அரு.வீரமணி	421608
திருஞானசம்பந்தம்	420551
மணிமேகலை ராஜேந்திரன்	424671.461509
ரா.சு.கவிதைப்பித்தன்	424253
அப்துல் மஜித்	424712, 423159, 422489
சாத்தையா MC	424710
சந்திரசேகரன்	422254,420445
சுட சரவணன்	420408
மாரியப்பா	422700
சந்திரன்	423959

காங்கிரஸ்

பூமா. ராமசாமி	422151
லேணா.சரவணன்	421478
J.முகமது கனி	422253,421919
ஆரோக்கியசாமி	420289
RAS. மனோகரன்	424742
S.அப்துல்நாஸர்	465069
T.புஷ்பராஜ்	421508
குட்லக் மீரா	422466, 421011, 420318
தமிழரசன்	421240
உமையாள் மாணிக்கம்	423302
சி.சாமிநாதன்	466699, 465699
K.R.பழனியப்பன்	465899
மதன் பாலசுப்பிரமணியன்	421799
A.சந்திரசேகரன்	422068

அ.இ.அ.தி.மு.க.

எம்.ராசேந்திரன்	420292,423023
சி. விஜயபால்கர்	72460,432333
எம். இராதாகிருஷ்ணன்	
கருப்பாயி	
செல்லம்	422894
V.C.ராமையா	442327
குழ.செல்லையா	460090
செல்லத்துரை	420102

M.G.R.கழகம்

M.G.R. மன்றம்	421532
R.M.வீரப்பன்	460600

மதிமுக

அலுவலகம்	422366
சந்திரசேகரன்	461884
V.N.மணி	421759
K.M.ஷெரீப்	420977
பாவாணன்	422210

பா.ஜ.க.

S. திருநாவுக்கரசு	460295
KM.V.ராமநாதன்	460766
திவ்விய நாதன்	461787,460769
அ.சுந்தர்ரஜன்	460130
குழ.முத்துக்கிருஷ்ணன்	425953
வீர. துரைசிங்கம்	424448
N.C.ராதாக்கிருஷ்ணன்	423231
பா.ராமநாதன்	461505
வேலுத்தேவர்	422729
முத்துசிதம்பரம்	422623

ராஜீவ் காங்கிரஸ்

ரவி பல்லவராயர்	424190
அப்பாவு பாலாண்டார்	460225
தமிழ்செல்வன்	422740
A.J.கென்னடி	421068

நிருபர்கள்

R.ராமகிருஷ்ணன்(தினமலர்)	470018 422003
R.தனபால்(தினமணி)	424111, 422111
ராஜமாணிக்கம்(தினகரன்)	422055,421255
J.சித்தார்த்தன்(தினத்தந்தி)	421505
அசோக்(தினபூமி)JAYA TV	422320,420062
சந்திரசேகரன் RAJ TV	420233
S.P.முத்துமணி (தினகரன் ஏஜென்ட்)	421073
முரளி(மாலைமுரசு)	427991,422057
(கங்காதரன்)AIR	425521, 424561
மனோகரன்(மாலைமலர்)SUNTV	472622,427260
சுந்தர் (ஜெயின் டிவி)	424549
R.ரவிச்சந்திரன் (தமிழ் முரசு)	422111
உதயகுமார் (மணிச்சுடர்)	426864
மோகன் (தினமலர்)	422003
இராதாகிருஷ்ணன்(காலைக்கதிர்)	

மத்திய அரசு அலுவலகங்கள்

வருமானவரித்துறை 422395
ரயில்வே ஸ்டேஷன் 460251
ரயில்வே போலீஸ் 460249
TV. ஒளிபரப்பு நிலையம் 421396
ரயில்வே மெயில் சர்வீஸ் 461325
அஞ்சல் கண்காணிப்பாளர் 421220,421400
FAX 422434
உள்ளூர் தொலைபேசி விசாரணை 422200
தபால் விசாரனை 420722
புகார் (Complaint) 422400
தலைமை தபால் அதிகாரி 420193
உதவி அஞ்சல் கண்காணிப்பாளர் 421191
தலைமைத்தபால் நிலையம் 420722
உதவி தந்தி அலுவலர் 421998
போனோகிராம் 421497
கோட்டப் பொறியாளர் தொலைபேசி 421900
உதவிப் பொறியாளர் ஓர்க்ஸ் 422142
தொலைபேசி விசாரணை வெளியூர் 421500
உதவிப் பொறியாளர் தொலைபேசி 421530
சென்ட்ரல் எக்சைஸ் 420358,422349
டிரங் புக்கிங் 180

மாநில அரசு அலுவலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் 421624,to 25
மாவட்ட ஆட்சித் தலைவர் வீடு 421663,421690
மாவட்ட வருவாய் அலுவலர் 421942,461825,420946
கோட்டாட்சித் தலைவர் 460208,422219
வட்டாட்சியர் 421623,421566
மாவட்ட வழங்கல் அலுவலர் 421626,421671
மாவட்ட சமூகநல அலுவலர் 422270
கோட்ட வளர்ச்சி அலுவலர் 422171
மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் 421454,421756
வணிகவரி உதவி ஆணையர் 421935,421705
வணிகவரி அலுவலகம் D.C. 421908
மாவட்டப் போக்குவரத்து அலுவலர் 421619,421618
மாவட்ட சுகாதார அலுவலர் 421733
